

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக கழகம்
யாழ்/கனகரத்தினம்
ம. ம. வி.
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு
# திட்டம்
# மூடப்படுகிறது.

(குறுநாவல்)

து. வைத்திலிங்கம்

[ரசிகமணி கனகசெந்தி நாதன் ஞாபகார்த்த குறுநாவல் போட்டியில் முதற் பரிசு பெற்றது.]

வெளியீடு:
கல்யாணி பிரசுரம்
செம்பியன் லேன், கொக்குவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு திட்டம் மூடப்படுகிறது
(குறுநாவல்)

முதற்பதிப்பு: ஏப்ரல் 1990
பதிப்புரிமை: ஆசிரியருக்கே
பிரசுரம்:- (கல்யாணி பிரசுரம்)
செம்பியன் லேன்
கொக்குவில்
விலை: ரூபா 15/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே நுழைவதற்கு முன்.........

ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப் பூ சர்க்கரை'' என்ற கூற்றின் உண்மையான அர்த்தத்தை நான் பணி புரிந்த ஒருஊரில் கண்கூடாகக் காணவும் உணரவும் முடிந்தது.

கல்வியால் மிகவும் பின் தங்கியஇடத்தில் படித்துப் பட்டம் பெற்றவன் ஊருக்கு நன்மை செய்வதாகக் கூறிக் கொண்டு தனக்குப்பதவியும் புகழும் சேர்த்த தன்மை தனது வளர்ச்சிக்கு அரசியலைப் பகடைக்காயாகப் பயன் படுத்திய சூழ்ச்சித் திறன் அரசின் உதவியுடன் ஆரம் பிக்கப் பட்ட நல்ல திட்டம் ஒன்று போட்டியாலும் பொறாமையாலும் அநியாயமாக மூடப்பட்ட விதம் - இவை எல்லாம் சேர்ந்து தான் இந்த குறுநாவலை எழுத என்னைத் தூண்டிய அம்சங்களாகும்.

அரசியல் காற்று தனிமனிதன் ஒருவனையும், ஏன் சொல்லப் போனால் ஒரு கிராமத்தையும் முற்றாக மாற்றி விடும் அவலநிலையை இக்குறுநாவலில் நான் சித்திரித்துள்ளேன்

ஈழநாடுதினசரியின் அனுசரணையுடன் யாழ் இலக்கிய வட்டம் நடத்திய அமரர் கனக செந்திநாதன் ஞாபகார்த்தப் போட்டியில் இக்குறு நாவல் முதற் பரிசைப் பெற்றுத் தந்தது.

இக்குறுநாவலுக்கு முன்னுரை வழங்கிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும் முகப்பு ஓவியம் வரைந்த வி. கே. அவர்களுக்கும் நூலை அச்சிட்ட அபிராமி அச்சகத்துக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். அந்த நல்ல உள்ளங்களுக்கு எனது நன்றிகள்.

**து. வைத்திலிங்கம்**
உதவி அரசாங்க அதிபர்
வலி- மேற்கு, சங்கானை

19- 03- 1990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

கதைநிகழ் களத்துடன் நேரடித்தொடர்பும் அதனால் பெரும் அனுபவமும் உடைய புனைகதை ஆசிரியன் அக்களத்தை நடுவாகக்கொண்டு கதை புனையுமிடத்து அது உண்மையும் அதன் பலனாக செம்மையும் இவற்றின் விளைவான அழகும் உடைய ஆக்கமாக அக்கதை ஆகிவிடுவது தவிர்க்கமுடியாத தொன்றாகும். திரு து. வைத்திலிங்கம் அவர்களுடைய ஒரு திட்டம் மூடப்படுகிறது என்னும் குறுநாவல் இத்தகையதே. உதவி அரசாங்க அதிபர் பணிமனைகள் பலவற்றிலே பல்வேறிடங்களிலும் கடமையாற்றிய திரு து. வைத்திலிங்கம் அவர்கள் (இவர் ஒரு உதவி அரசாங்க அதிபர்) அங்கு நடைபெறும் நாளாந்த முறைகளுடன் சாதாரண பொதுமக்கள் இலகுவிலே புரிந்துகொள்ள முடியாத உள்ளிரகசியங்களையும், நெளிவு சுளிவுகளையும் நன்கு தெரிந்திருப்பது ஆச்சரியமில்லை. அங்குள்ள பணியாட்களின் - உத்தியோகத்தர்களின் ஊன்றிய நலன்கள், உளவியற்பாங்குகள், நடத்தைகள், போக்குகள் ஆகியவற்றினை நாளாந்தம் அவதானித்துப் பெற்ற அனுபவ அறிவு அவருக்குண்டு. இதனால், பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தை நடுவாகக்கொண்டு அப்பிரிவிலே நடைமுறைப்படுத்தப்பட்ட படித்த பெண்கள் விவசாயத்திட்டம் பற்றியும், அது அறிமுகப்படுத்தப்பட்ட பின்னணி அதனுடன் தொடர்புள்ள உத்தியோகத்தர்கள், உயர்புள்ளிகள் திட்டத்துக்கமைய விவசாயம் செய்யக்காணி பெற்ற பெண்கள் ஆகியோரையெல்லாம் உண்மைநிலை தவறாமல் படைக்கும் ஆற்றலை ஆசிரியர் பெற்றுவிடுகிறார்

ஊரிலே செல்வாக்காக இருப்பதற்கு எதையும் செய்யத்தயங்காதவர்கள் சிலர் இருப்பதை நாம் அனுபவமூலமாகக் கண்டிருக்கிறோம். இத்தகையோரின் உயர்ச்சிக்குப்பலியாகுபவர்கள் பெரும்பாலும் வறுமைக்கோட்டுக்குக்கீழே இருப்பவர்களும் நொந்து நைந்து போனவர்களுமேயாவர். பூஞ்சோலைப்பகுதியின் எம். பீ.யினுடைய அணுக்கத்தொடர்பாலே அங்கு பெரிய புள்ளியாக ஆகின்றான் பரமலிங்கம். ஆனால், புத்திஜீவியாகிய அரசகேசரி எப்படியாவது பூஞ்சோலைப்பகுதியிலே செல்வாக்குள்ளவனாக ஆகிவிட அமைச்சருடைய அணுக்கத்தொண்டனாகி விடுகிறான். நல்ல நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்ட படித்த பெண்கள் விவசாயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் அரசகேசரியின் கையிலே குரங்கின்கைப்பூமாலை யாகிவிடுகின்றது. அமைச்சருடைய ஆதரவு தனக்கு எப்பொழுதுமுள்ளது என்ற அகங்காரத்தாலே நீதிக்கும் தர்மத்துக்கும் புறம்பான எச்செயல்களையும் செய்யவும் அதைச்செய்ய நினைக்கவும் அவன் தயங்கியதில்லை. திட்டம் வெற்றியடையவேண்டுமென உள்மன சுத்தியுடனே ஈடுபட்ட பூரணி என்னும் பெண் இவனாலே பெரும் கஷ்டங்களுக்குள்ளாகிறாள். ஆனால், அதே வேளையில் செல்வாக்குள்ளவர்களின் ஆதரவைப்பெற்றுத்தம் காரியங்கள் சாதிப்பவர்கள் பிரதிநிதியாக வரும் கனகலட்சுமி அரசகேசரியின் ஆதரவைப் பெற்றுதான் நினைத்தவைகளைச்சாதிக்கிறாள் அரசகேசரியின் பிழைகளைச்சுட்டிக்காட்டிய ஏ. ஜீ. ஏ அமைச்சராலே, இடமாற்றஞ் செய்யப்படுகிறார் அரசகேசரியின் ஏதேச்சாதிகாரச் செயல்களாலே ஒரு பயனுள்ள நல்ல திட்டமே பாழாகிவிடுகின்றது. இறுதியிலே அரசு மாற்றம்மேற்படத்திட்டமும் மூடப்படுகின்றது, அரசகேசரிக்கு ஆதரவாயிருந்த அமைச்சரும்தேர்தலில் மண்கவ்வி விடுகின்றார்.

நாவல் முழுவதும் அரசயந்திரத்தைச் சீராக இயங்கி எல்லோருக்கும் பயன்படும் வகையிலே விடாமல் தடுக்கும் ஒரு சில அரச உத்தியோகத்தர்கள் எம். பீ.க்கள், அமைச்சர்கள் ஆகியோர்களுக்கு எதிராகக்குரல் கொடுப்பதாகவும், இதனாலே பாதிப்படையும் வலுவற்ற சாதாரண மக்களிலே அனுதாபம் காட்டுவதாகவுமே அமைகின்றது. எனினும், நாவல் முழுவதையும் படித்து முடித்தபின்னர் அரசகேசரி போன்ற உத்தியோகத்தர்களுக்குத் தண்டனையென்பதே கிடையாதா? பூமணி போன்றவர்கள் விரக்தியுடன் பெருமூச்சு விட்டுக் கொண்டுதான் இருக்கவேண்டுமா? என்று வினாக்கள் என்மனதிலே எழுந்தன. ஆசிரியர் இவைபற்றி என்ன கருதினாரோ தெரியவில்லை.

தான் எடுத்துக்கொண்ட கதைக்கேற்ற தமிழ்நடையை ஆசிரியர் கையாளுகிறார்.

> "மாறுக பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபருக்கு இடமாற்ற அறிவித்தல் ரேடியோ மெசேச், மூலம் கொழும்பிலிருந்து வந்தது,, (பக் 37)

இங்கு 'ரேடியோ மெசேச்' என்னும் ஆங்கிலத் தொடர் அப்படியே உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த தொடரை ''வானொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விச் செய்திமூலம்'' என்று தமிழிலே எழுதலாம். ஆனால், நாம் அன்றாடம் பேசும் தமிழை ஒருகண நேரம் எண்ணிப்பாருங்கள்; ''கடிதம் போஸ்ற் பண்ணிவிட்டேன்'', ''ரெலிபோன் பண்ணியாச்சோ'', ''ரிக்கற் புக்பண்ணியாச்சோ'' என்றெல்லாம் ''பண்ணித்தமிழ்'' தான் நாம் பெரும்பாலும் பேசுகின்றோம். இது ஓரளவு படித்தவர்களுடைய தமிழ். இந்நாவல் அவர்களையே பாத்திரங்களாகக் கொண்டமைகிறது. இதனாலே, அவர்களுடைய தமிழ் நடையையே ஆசிரியர் கையாண்டு நாவலுக்குச் சிறப்பூட்டுகிறார்.

கதை சொல்லுதற்கு ஆசிரியர் 'பின்னோக்கிப் பார்க்கும்' உத்திமுறையையே கையாளுகிறார். பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைக் காட்டி, அங்கு நடைபெறும் நிகழ்வுகள்பற்றி ''இண்டைக்கு முழுங்கேணித் திட்டத்திலே காணி கொடுக்கிறதோ காணி கொடுத்தாக்களுக்குப் பேமிற் கொடுக்கிறதோ எண்டமாதிரிக்கதை அடிபடுது ''என்றும், ''அங்கை குடுக்கிறதுக்கு என்ன கிடக்கு? எல்லாத்தையும் முடிச்சுப் போட்டினம். பேந்தென்ன'' என்றும் வழிப்போக்கர்கள் கூறுவதைச் சொல்லி, இவற்றையெல்லாம் கேட்டுக்கொண்டு, அவ்வலுவலக வெளியிலில் போடப்பட்டிருந்த மரவாங்கிலில் அமர்ந்திருந்த பூமணியைக் காட்டி, அவளுடைய

''பெருமூச்சொன்று விரக்தியுடன் காற்றில் கலந்தது. அவள் மனம் அசைபோட்டது''

என்று கூறி ஆசிரியர் முழங்கேணித் திட்டக் கதையைப் பின்னோக்கிப்பார்க்க வைக்கிறார். கதைமுழுவதும் பூமணியின் மனநினைவாகத்தரப்படுகின்றது.

''அவள் மனம் கனத்திருந்தது!''

என்றுகதை முடிகின்றது. பூமணியின் மனம் கனத்திருந்ததின் காரணம் கதையிலே தெளிவாக்கப்பட்டுள்ளது. அக்கனத்தினைப் போக்குவதற்கு வழி உண்டா? இவ்வினா நாவல் முடிந்த பின்னர் தொக்கியே நிற்கின்றது.

திரு. துவைத்திலிங்கம் மக்கள் நாட்டமுடைய கலைஞர் என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதற்கு இக்குறு நாவல் நல்ல சான்ருக உள்ளது. மெலிந்தவர்களுக்காக இரங்கும் அவருடைய சுபாவம் கதையூடே புலப்படுத்கப்படுகின்றது. மானிடநேயமுள்ள எழுத்தாளர் என்ற காரணத்திஞலேயே தன்னுடைய பணிமனையுடன் தொடர்பான, முன்னர் நடந்து முடிந்த ஒரு நிகழ்வினை எடுத்துக் கதையாக்கிக் கலைவடிவமாகத் தந்துள்ளார். இது போன்ற நிகழ்வுகள் இனிமேல் நடக்கக்கூடாது., அவற்ருல் சாதாரண மக்கள் அவதியுறக்கூடாது என்பதே இக்கதை மூலம் அவர் எமக்குத் தரும் செய்தி.

ஆசிரியருடைய கலைப்பணிக்கு எம்முடைய பாராட்டுக்கள் அப்பணி மேலும் சிறப்புடன் முன் நடக்க எம்முடைய வாழ்த்துக்கள்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [1]

பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் இன்று காலை களைகட்டி உள்ளது. அலுவலகப் பணியாள் தம்பிராசா வலதுகாலை நொண்டிக்கொண்டு அலுவலகத்தில் நிற்பதும் இடையிடையே அலுவலகத்துக்கு முன்னுல் அமைந்துள்ள தேநீர்க்கடைக்கு ஓடுவதும், அலுவலகத்தில் இருந்து அழைப்புமணி அடித்ததும், 'ஐயா வந்திட்டன்' என்று சொல்லியவாறே நொண்டிக்காலை இழுத்துக்கொண்டு ஓட்டமும் நடையுமாய் வருவதும் வேடிக்கையாய் இருந்தது. பூஞ்சோலை கடைத்தெருவுக்குச் செல்லும் பிரதான பாதையில் இந்த அலுவலகம் அமைந்துள்ளதால், பாதையால் செல்லும் எவரும் அங்கு பார்வையைச் செலுத்தாமல் போக மாட்டார்கள்.

''என்ன இண்டைக்கு மணியகாரன் கந்தோர் வலு அமளிப்படுகுது!

''ஓமோம்! சனங்களும் நிக்கினம். இண்டைக்கு முழங்கேணித் திட்டத்திலை காணி கொடுக்கிறதோ, காணி கொடுத்தாக்களுக்கு பேமிற் கொடுக்கிறதோ எண்டமாதிரிக் கதை அடிபடுது.

''அங்கை குடுக்கிறதுக்கு என்ன கிடக்கு? எல்லாத்தையும் முடிச்சுப்போட்டினம், பேந்தென்ன...

விதியால் சென்ற இருவர் பேசிக்கொண்டு போனது பூமணியின் காதுகளுக்கு மிகத் தெளிவாகக் கேட்டது.

வெளிவராந்தாவில் போடப்பட்டிருந்த மரவாங்கிலில் அவள் அமர்ந்திருக்கிருள். இப்படி எத்தனை நாட்கள் வந்து இந்த மரவாங்கிலில் அமர்ந்திருப்பாள்...

பெருமூச்சொன்று விரக்தியுடன் காற்றில் கலந்தது அவள் மனம் அசைபோட்டது.

அவளோடு வேறு பல பெண்களும் அங்குமிங்கும் பரவலாகக் காணப்பட்டனர். கச்சேரியிலிருந்து மாவட்டக் காணி அதிகாரி வந்து, உள்ளே உதவி அரசாங்க அதிபரோடு உரையாடிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருந்தார்.

''காணியை கான்சல்பண்ணப்போயினமாம் ..!

''கான்சல் பண்ணுயினம்... சில நேரங்களில் காசைக் கட்டச் சொல்லி, பேமிற் தருவினம் ..''

''சிலபேர் காணி வித்துப் போட்டினம்தானே. அவைக்கு என்ன நடக்கும்?''

''வித்தவை பேசாமல் வாயை மூடிக்கொண்டு இருக்கவேண்டியதுதான்''

''இவள் கனகலட்சுமி தன்ரை காணியை விட மூண்டு துண்டுகள் வாங்கிப் போட்டாள். இனி இருந்துபாரன். ஏதாவதுதில் லுமுல்லுச்செய்து பேமிற் எடுப்பாள்..''

''அப்படிப் பேமிற் குடுத்தினமெண்டால் எங்களுக்கு ஒரு வசதியும் செய்து தரமாட்டினமோ...''

''ஒரு விஷயத்தையும் விளங்கிறமாதிரி சொல்லமாட்டினமாம்! டி எல் ஓ ஒரு கதை; ஏ ஜி ஏ ஒரு கதை; விதானேயார் ஒரு கதை எண்டு ஆரைப் பார்த்தாலும் பிடி கொடுக்காமல் கதைக்கினம்... அரச கேசரி செய்த வேலையைப் பாத்தியே... அந்தப் பக்கம் இல்லே . !''

''உவன்கள் உப்பிடித்தான். பிடிகொடுக்காமல் கதைச்சுப் பழகிப்போச்சு...! நினேச்ச பாட்டுக்குக் கதைச்சுப்போட்டு நாளைக்கு ஒரு கேள்வி வந்தா தாங்கள் மாட்டுப்படக்கூடாது எண்டுதான் பேசாமல் அப்பிடி இப்படி இழுத்துக்கொண்டு... கேட்டால் கிராம விஸ்தரிப்பு வேலே நடக்குது... பேமிற் தரலாம் எண்டு சமாளிக்கினம்''

தன்னேச் சுற்றி நடக்கும் உரையாடல்களே மௌனமாக் கேட்டுக்கொண்டிருந்தாள் பூமணி!

உதவி அரசாங்க அதிபரின் அறைக்கு எதிர்நேரே அமைந்திருக்கும் பெரிய கூடத்துக்குள் மரவட்டக் காணி அதிகாரி சென்று அமர்ந்துகொண்டார். அவருக்குப் பின்னல் பெரிய பைல் கட்டுகளே நெஞ்சோடு அணைத்துக்கொண்டு இலிகிதர் உள்ளே சென்ருர். பொதுசனங்கள் அமர்ந்திருக்கும் விருந்தைக்கு நேரே உள்ள கதவைத் திறந்துவிட்டான் அலுவலகப் பணியாள் தம்பிராசா சகலரது பார்வையும் அறையினுள் ஊடுருவிச் சென்றது. பைல் கட்டுகளேயும், காணிகளின் எல்லேகள் குறிக்கப்பட்டு துண்டு துண்டுகளாகக் காட்டப்பட்ட வரை படத்தையும் மேசைமேல் பரப்பிய இலிகிதர் பின்னர், நீண்டதொரு பட்டியலே எடுத்து மேலும்கீழும் பார்த்துவிட்டு வெளியே வந்தார். எல்லோரும் அவரது முகத்தையே ... ... பார்த்துக்கொண்டிருந்தார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் இப்ப இதிலே உள்ள பெயர்களை ஒவ்வொன்ருக வாசிப்பேன். மறுபடி நாங்கள் கூப்பிடும்போது ஒவ்வொருவராய் உள்ளே வரலாம்.''

பட்டியலைப் பார்த்து ஒவ்வொரு பெயராய் வாசித்தார். வந்திருந்தவர்கள் தங்கள் தங்கள் பெயர் வாசிக்கப்பட்டதும் தலையை ஆட்டித் தமது வரவைத் தெரிவித்துக் கொண்டனர். இலிகிதர் ஒரு திருப்தியுடன் உள்ளே சென்ருர்.

''தம்பிராசா'' இலிகிதரின் அழைப்பைக் கேட்டுக் காலை இழுத்தபடியே தம்பிராசா ஓடிவந்தான்.

''இஞ்சை இதிலை நில்.

நான் பெயரைக் கூப்பிட நீ ஒவ்வொருதராய் உள்ளே அனுப்பு . !

''இவருக்கு நான் ஒரு சிண் ...!'' — தம்பிராசா முணுமுணுத்தான்.

''சகலரும் வந்திருக்கினம் சேர்...''— பட்டியலை மேசையில் வைத்தபடி, இலிகிதர் மாவட்டக் காணி அதிகாரியைப் பார்த்துக் கூறினர்.

''வந்திருக்கினமோ . நல்ல காலம். இன்னெருக்கா வந்து போகாமல் இண்டைக்கே விஷயத்தை முடித்து விடலாம். இந்தப் பூஞ்சோலைக்கு வாறதெண்டா மனுசன்ரை உயிர் போய்விடும்;... ஒருநாள் பயணம் பஸ் ஏறி ... தோணி ஏறி ...''— சொல்லிக் கொண்டே இலிகிதரின் முகத்தைப் பார்த்தார் அதிகாரி. அவர் இப்படிச் சலித்துக்கொண்டு கூறிய வார்த்தைகள் தெளிவாக வெளியே நின்றவர்களுக்குக் கேட்டன.

பூமணிக்கும் கேட்டது.

'ஒருநாள் வருவதற்கே இப்படிச் சலித்துக்கொள்ளுருர் ஒவ்வொரு நாளும் இந்த ஊர்சனங்கள் பஸ் ஏறித் தோணி ஏறிப்போய் வாற கஸ்டங்களை ஒருதரும் உணரேல்லையே. அவர்களும் இவ்வளவு கஷ்டங்களையும் மௌனமாகச் சகித்துக்கொண்டு... அவர்களுக்கில்லாத கஷ்டமா...' தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

'சில பேர் காணியளை வித்துப் போட்டினமாம்... இப்ப அவையளிலை சிலபேர் இஞ்சை வரவில்லைப் போலைகிடக்கு. சில ஆட்கள் இரண்டு மூண்டு துண்டுகள்கூட விலைக்கு வேண்டியாச்சு எண்டு கதை அடிபடுகுது. அதுக்கு நாங்கள் என்ன மாதிரிச் செய்வம் சேர்...?— இலிகிதர் கேட்டார்''.

''இஞ்சைபார் தேவபாலன், வித்தவையைப்பற்றி நாங்கள் ஏன் கவலைப்படவேணும் ? எங்கடை அலுவலை நாங்கள் பாப்பம்! நீர் ஆட்களைக் கூப்பிடும்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சோலை மிகப் பழமையான குடியிருப்புப் பகுதி. நல்ல பல இனிமையான பெயர்களைத் தாங்கிய குறிச்சிகளை உள்ளடக்கிய பிரதேசம், கடல் ஏரியை அண்டி இருப்பதால் மக்களில் அரைவாசிப்பேர் கடற்தொழில் செய்கின்றனர், மிச்ச அரைவாசிப்பேர் விவசாயம் தான்.

எல்லாமே வானம்பார்த்த பூமிதான்!
வானம் பொய்த்தால் அவ்வளவுதான்!

'ஒரு வருடம் பயிர் அமோகமாய் இருந்தால், கண்பட்ட மாதிரி அடுத்த வருடம் நெற்செய்கை பிழைத்துவிடும் இது பூஞ்சோலை செய்த பாவம்.. எங்கடை சாபக்கேடு' என்று மக்கள் தங்களுக்குள் சொல்லிச் சமாதானம் அடைந்து கொள்வர். ஆனால் மழை பொழிந்து, விளைச்சலும் அமோகமாயிருந்து விட்டாலோ ஒரே கொண்டாட்டம்தான். அறுவடை காலம் வந்ததும் பூஞ்சோலை படும்பாட்டைச் சொல்ல முடியாது! அருவிவெட்டு, சூட்டடிப்பு என்று எல்லோரும் ஆலாய்ப்பறப்பார்கள், உழவுயந்திர வண்டிகள் தாறுமாறு ஓடிக்கொண்டு பூஞ்சோலைக் கடைத்தெருப் பகுதியைக் கலக்கும். சாராய விற்பனை மிக உச்சமாக இருக்கும், ஒவ்வொரு நாளும் பட்டணத்திலிருந்து காலை ஏழுமணிக்கு வரும் பஸ் வண்டியில் வழக்கமாகச் சாராயம் கொண்டுவந்து கடைகளுக்குக் கொடுக்கும் நந்தகோபாலுக்கு இக்காலங்களில் ஏக கிராக்கி. வெளியூர்க்காரர்கள் லொறிகளுடன் வந்து முற்றுகை யிட்டு விடுவார்கள். அகப்பட்டவிலைக்கு நெல்லை மூடை மூடையாகக் கட்டுவார்கள். வெளியூர்க்காரரை உள்ளூரில் புதுப்பணக்காரராய் உள்ளவர்கள் முந்திவிடுவர். முதலிலேயே பணத்தைக் கட்டி விவசாயிகளைத் தங்களின் அடிமைகளாக்கி விடுவார்கள் அவர்களிடமிருந்து அறுவடை செய்த கையோடு குறைந்த விலைக்கு நெல்லை வாங்கிப் பத்திரப்படுத்திவைப்பார்கள். பின்னர் நெல்விலை உச்சத்துக்குப்போகும் சமயம் காத்திருந்து சந்தர்ப்பத்தைப் பொன்னாக்கி கொள்ளுவார்கள்.

இந்த மண்ணில் விளையும் நெல்லுக்கு அத்தனை கிராக்கி...

"மொட்டைக் கறுப்பன்— பச்சைப்பெருமாள்"— சொல்லும்போதே வாய் இனிக்கும்.

அறுவடை முடிந்தால் வயல்வேலை முடிந்துவிடும். சிறுபோக வசதியில்லாதபடியால் மறுமுறை பெரும்போக நெற்செய்கை ஆரம்பமாகுமட்டும் வேறுவேலை செய்யமாட்டார்கள். அவர்கள் வேறு என்னதான் செய்யமுடியும்?

பூஞ்சோலையில் அநேகம்பேர் நன்றாகக் குடிப்பார்கள். அரசாங்க காடுகளில் நல்ல மரங்களைக் களவாகவெட்டிப் பட்டினத்துக்கு அனுப்புவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் அடங்கிலும் பனை மட்டும் 'வஞ்சகமில்லாமல் நிறைந்து நிற்கின்றன. இது இயற்கை அளித்த பெருஞ்செல்வம். இந்தப் பனையும் பனையும் பூவரசு மரங்களும் இல்லாவிட்டால் பூஞ்சோலையில் பச்சை என்பதையே காணமுடியாது! பகலில் கடைத் தெருவில் திருவிழா மாதிரி ஊர்சனங்கள் கூடுவார்கள். பகல் பத்து மணிக்குப் பின்பு அனேகமாக ஆண்களின் பேச்சு வேறு மாதிரி அமைந்திருக்கும். இது, தாராளமாக்கிடைக்கும் பனம் கள், தன் ஆதிக்கத்தைச் செலுத்துவதன் பிரதிபலிப்பு!

ஊரில் படித்துப் பட்டம் பெற்றவர்களை விரல்விட்டு எண்ணி விடலாம். நாலு ஆண்களும் இரண்டு பெண்களும் அங்கு ஆரம்ப கல்வியை முடித்துக்கொண்டு வெளி மாவட்டங்களில் உயர்கல்வி பெற்றுப் பல்கலைகழகத்துக்குச் சென்று பட்டதாரியானுர்கள். மகாவித்தியாலயம் என்ற பெயரினுல் ஒரு பாடசாலை அழைக்கப் படுகிறது. அங்கு ஆதாரத்தேவையான நல்ல குடிதண்ணீர் கிடையாது. மூன்று சின்னக்கட்டிடங்கள். அதிபர் என்ற பெயரில் ஒவ்வொரு வருடமும் புதுப்புது ஆள். பூஞ்சோலையை உள்ளடக்சிய தொகுதியின் 'எம் பி' யின் எண்ணத்துக்கு மாருக நடந்தால் இந்த ஒரு வருட காலம் மேலும் சுருங்கும்;

தினமும் பஸ் ஏறி, தோணி ஏறி, கல்வி இலாகா, தொகுதி எம் பி. மாணவர்கள் யாவரையும் திட்டித்தீர்த்து நேரம் பிந்தி வந்து நேரத்தோடு செல்லும் ஆசிரியர்கள்!

அவர்களைத் திட்டித்தீர்க்கும் பெற்றேர்:

ஒரு தபால் நிலையம்; எட்டுக் கட்டில்களுடன் இயங்கும் ஒரு கிராமிய ஆஸ்பத்திரி, இங்கு பணிபுரியும் டாக்டர்கள் பூஞ்சோலையை வேப்பங்காயாகக் கருதியபடியால் எப்பவுமே 'றிலீவ்' கடமையில் உள்ள டாக்டர்களே!

—அவர்களின் தயவில் உள்ள நோயாளிகள். ஏதோ நல்ல காற்று அடித்த படியால் அண்மையில் உண்டாக்கிய நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகம்.

அது இன்றும் பூஞ்சோலை மக்களின் ''ரேட்டுக் கந்தோர் தான். இவைகளைத் தவிர குறிச்சிகளின் நிர்வாகத்தைக் கவனிக்கும் உதவி அரசாங்க அதிபர் பணிமனை. பூஞ்சோலை மக்கள் பழைய வழக்கப்படி இன்றைக்கும் மணிய கந்தோர்'' என்றுதான் அழைக்கிருர்கள். இதுதான் இன்றைய பூஞ்சோலை.

ஆனுல்

என்னதான் இல்லாவிட்டாலும் பூஞ்சோலை மகளை அரசியல் காய்ச்சல் ஆட்டிப்படைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [2]

பூஞ்சோலையை அடக்கிய தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவர் யார் செய்த புண்ணியமோ தொடர்ந்து பலமுறை மக்களால் தெரிவு செய்யப்பட்டு விட்டார்.

தேர்தலுக்கு முன் ஒருமுறை கூட்டத்துக்கும், தேர்தலுக்குப் பின் ஒரு முறையும் பூஞ்சோலைக்கு வருவார்.

ஊர் திருவிழாக் கோலம் கொள்ளும்!

மாலை கட்டிப் பிழைக்கும் பூபாலு. நரிமுகத்தில் விழித்தவர் போல மகிழ்ச்சி அடைவார். அன்று மகிழ்ச்சியில் மிதப்பார். மக்கள், தங்கள் அன்பு மரியாதை யாவும் பூபாலு கட்டிவிற்கும் காட்டு மல்லிகைப் பூவில் அடக்கம் என்பதை வெளிக்காட்டுவர். பூஞ்சோலைக் கடைத்தெருவில் உள்ள நாலு தேநீர்க் கடை முதலாளிகள் அன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல் உழைப்பு உழைத்து விடுவார்கள்.

நிச்சயமாக அந்த நாலு தேநீர்க் கடைகளிலும் பின்பக்கம் அமோகமான சாராய விற்பனை இடம்பெறும்! பூந்சோலையில் ஒருவிஷேசம், அங்கு கடைத்தெருவில் உள்ள இரண்டு முடி திருத்தும் நிலையங்களிலும் சாராய விற்பனை உண்டு! உள்ளூரில் ஒரு முக்கிய புள்ளியாகப் பரமலிங்கம் என்பவரை எம். பி. ஆக்கியிருந்தார். எந்த முறையில் இருவரும் நண்பர்கள் ஆனார்களோ தெரியாது. எம். பி. பரமலிங்கத்தை மிகவும் நம்பிக்கைக்குரிய பாத்திரமாக்கிவிட்டார். அவன் அதிகம் படிக்கவில்லை. சாதாரண விவசாயிதான். வயலில் நிற்கும் நேரத்தைவிட கடைத்தெருவில் நிற்கும் நேரம்தான் அதிகம். 'சிக்கெனப் பிடித்தேன் நான்' என்று எம். பி. யை அவன் முழுதும் நம்பி. அவர் இட்ட கட்டளை வேத வாக்கென எண்ணிச் செயல்பட்டான். தான் இங்கு சதா வரமுடியாத காரணத்தால் பரமலிங்கமே எம். பி. மாதிரிச் செயலாற்றுவான் என எம். பி. ஒரு பிரகடனம் செய்துவிட்டார்.

பின்னர் கேட்கவா வேண்டும்?

அன்று தொடக்கம் தினமும் சலவைசெய்து, மடிப்புக் குலையாத வேட்டி சட்டையுடன் கடைத்தெருவில் பரமலிங்கம் நட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடத் தொடங்கிவிட்டான். எம். பி. யைக் கொண்டு எந்த அலுவல் செய்ய வேண்டுமோ, அதற்கெல்லாம் இவனிடம்தான் பிள்ளையார் சுழிபோட்டமாதிரி ஆரம்பிக்க வேண்டும்.

சிபார்சுக் கடிதமா? பரமலிங்கம்!

நியமனமா? - பரமலிங்கம்!

—இதுதான் பூஞ்சோலையின் பல்லவியாய் மாறியது. தற்செயலாய்த் தப்பித் தவறி யாராவது எம். பி. யிடம் நேரில் போய் விட்டாலோ... வந்தது வினை;

''நீங்கள் ஏன் இஞ்சை நேரிலை வந்தீர்கள்? பரமலிங்கத்திடமிருந்து ஒரு துண்டு வேண்டிக்கொண்டு வாருங்கள்...''— எம். பி யின் செயலாளர் சொல்லிவிடுவார்.

எம். பி. யிடம் நேரில் சென்றவர் திரும்பிப் பரமலிங்கத்திடம் வருவார்.

''நீர் இப்ப வால் முளைச்சு அவதிப்படுகிறீர்... இஞ்சை நான் ஒருவன் இருக்கிறது தெரியாது. என்ன...?''

பரமலிங்கத்துக்குக் கோபம் வந்துவிடும். அவனுடைய கோபத்திற்கு ஆளாகியவர் பாடு பின்னர் கேட்கத்தேவையில்லை. அவர் என்றுமே எம். பி. யின் உதவியைப் பெறத் தகுதி இல்லாதவராய் ஆகிவிடுவார். அதற்காகப் பூஞ்சோலையில் எவரும் பரமலிங்கத்துடன் பகைத்துக்கொள்ள மாட்டார்கள்.

பரமலிங்கத்தின் முற்றிப்போன பக்தியை மெச்சி எம், பி. அரும்பாடுபட்டு அவனை ஒரு சமாதான நீதவானுக்கி விட்டார். அவனுக்குத் தலை கால் தெரியவில்லை! தனது ஆத்ம பரம விமோசனம் அடைந்ததொரு நிலையை எய்தி விட்டதாக எண்ணி மகிழ்ந்தான் அவன். ஊரில் எந்த விழாவாகட்டும் - அது கல்யாண வீடு என்ருலும் சரி, ருதுசாந்தி வைபவமென்ருலும் சரி, புதுமனைப் பிரவேச நிகழ்ச்சியென்ருலும் சரி - பரமலிங்கத்துக்கு முதன் மரியாதை; இழவுவீடு நடந்தாலும் பரமலிங்கத்துக்கு விசேட ஆள்வந்து செய்தி தெரிவிக்கப்படும். எந்த நிகழ்ச்சியானுலும், வைபவமானுலும் சரி, பரமலிங்கம் தவருது சமூகமளிப்பான்.

படித்த இளைஞர்கள் பரமலிங்கத்தின் தாசானுதாசர்கள் ஆகிவிட்டனர். அவனை நம்பினுல் கைவிடமாட்டான். ஏதாவது ஒரு அரசாங்க உத்தியோகத்தில் நுழைந்து விடலாம் என நம்பினுர்கள். பட்டம் பெற்ற நான்கு இளைஞர்களில் அரசகேசரி பல வருடங்கள் வேலையற்று இருந்தான் மற்றவர்கள் வெளியூர்களில் போய் ஏதோ ஒரு உத்தியோகத்தைத் தேடிக் கொண்டனர்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமலிங்கத்தை அரசகேசரி நம்பினுர். அவனது நம்பிக்கை வீண்போகவில்லை. எம்பியிடம் அவனை அழைத்துச்சென்று பலத்த சிபார்சு செய்தான். ''இவனை நாம் கைக்குள் வைத்துக்கொள்ள வேணும். சேர் ஊரிலை அரைவாசிப்பேர் இவனுடைய சொந்தக் காரர் தான்... இவனைக் கைவிட்டால் எங்களுக்கு நட்டம்.''

பரமலிங்கம் சொன்னுல் மறுபேச்சில்லைதானே எம்பியின் பலத்த சிபார்சின் பேரில் அரசகேசரி பூஞ்சோலைக்கு அபிவிருத்தி உத்தியோகத்தனுக நியமிக்கப்பட்டான்.

அரசாங்கம் பல நல்ல செயற் திட்டங்களை அமுல்படுத்தத் தொடங்கியது. நெல்லுக்கு இறைக்கும் நீர் புல்லுக்கும் பாய்ந்தது. பூஞ்சோலைக்கிராமம்அபிவிருத்திப் பட்டியலில் சேர்த்துக்கொள் ளப்பட்டது.

பூஞ்சோலையில் அபிவிருத்தித் திட்டமொன்றை ஆரம்பிக்க எம். பி. நடவடிக்கை எடுத்தார். இருபது இளம் பெண்களைத் தெரிவு செய்து படித்த பெண்கள் விவசாயத் திட்டம் ஒன்று ஆரம்பிக்க முழங்கேணி என்னும் இடத்தில் அரசகாணி ஆளுக்கு ஒரு ஏக்கர் வீதம் இருபது ஏக்கர் காடு ஒதுக்கப்பட்டது. பெண் களைத் தெரிவு செய்தல், காடு வெட்டுதல் காணி பிரித்துக் கொடுத்தல் போன்ற பணிகளை துரித கதியில் நடைபெற்றன. அபிவிருத்தி உத்தியோகத்தர் அரசகேசரி இப்பொழுது ஒருவருட அனுபவமும் பெற்று இப்பணிகளில் தன்னை முழுமையாக ஈடு படுத்திக் கொண்டான்.

இயற்கையாகவே சுறுசுறுப்புள்ளவன் அரசகேசரி மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் வளர்ந்தமையால் தன் படிப்பை ஆயுத மாக வைத்துச் சகல துறைகளிலும் முன்னேறவேண்டும் பூஞ்சோலை லைக் கிராமத்தில் தான் ஒரு முக்கியஸ்தனுக வரவேண்டும் மென் பதே அவனது நீண்டநாள் கனவாகும். அவனது அபிலாஷைகள் செயல் ரூபத்தில் வெளிவர ஒரு நிலைக்களமாக அவனது நியமனம், பரமலிங்கத்தின் சிநேகிதம் எம். பி யின் தொடர்புயாவும் அமைந் தன, எம். பி யின் அலுவலகத்துக்கும் இத்திட்டத்தோடு தொடர் புடைய பல்வேறு அலுவலகங்களுக்கும் அவன் செல்ல ஆரம்பித் ததும், அதிகார வர்க்கத்தின் நடைமுறைகள் பல அவனுக்கு அத்துப்படியாகி விட்டன. அரசசேவை – அரச அலுவலர் இரண் டும் சாதாரணமகன் அணுக முடியாதவை என்று அவன் தன் னுள்ளே கொண்டிருந்த பாமரத்தனமான எண்ணங்கள் அவனை விட்டு ஓடின. தன்னுள் பற்பல திட்டங்களை அவன் வகுத்துக் கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் திட்டத்தில் சேர்க்கத் தகுதியுள்ள படித்த பெண்களைத் தெரிவு செய்யும்பணிகள் இடம்பெற்றன.

பூஞ்சோலையில் பத்தாவதுவரை படித்த பெண்கள் இருக்கத்தான் செய்தனர் ஆனால் அதிக எண்ணிக்கை அளவில் இல்லை ஓரளவுக்குப் படித்த பெண்களைச் சேர்க்கவேண்டிய சூழ் நிலை பெண்கள் தெரிவில் அரசகேசரியும் பரமலிங்கமும் முக்கிய பங்கினை வகித்தனர். ''தம்பி முடிஞ்சஅளவு எங்கடை ஆக்களைத் தெரிவு செய்ய வேணும்... கரைச்சல் இல்லாத ஆட்களாக இருக்கவேணும்'' ''ஓமோம் அதுதான் என்னுடைய எண்ணமும்...'' அரசகேசரி பதில் இறுத்தான். உதவி அரசாங்க அதிபர் மாவட்டக் காணி அதிகாரி, அரசகேசரி ஆகியோர் தெரிவுச் சபையில் அமர்ந்தனர். அரசகேசரி தனக்குச் சேர்ந்தவர்களது பெயர்களையும், பரமலிங்கம் தனது ஆட்களின் பெயர்களையும் பட்டியல் போட்டு வைத்துக் கொண்டனர்.

பூஞ்சோலைக்கு ஒரு புதிய உதவி அரசாங்க அதிபர் மாற்றலாகிவந்திருந்தார். அவரை அந்த ஊருக்கு மாற்றுவதில் எம். பி. தீவிர பங்கு கொண்டிருந்தார். எம். பி. என்ன கோரிக்கை விடுத்தாலும் அதைச் செய்து முடிக்க முன்னிற்பார், எம்பிக்குத் தேவையான ஆள் என்றபடியால் அவர் பரமலிங்கத்துக்கும் தேவையானவராகி விட்டிருந்தார். ஆகவே தெரிவு விடயத்தில் பரமலிங்கமும் அரசகேசரியும் திருப்தி கொண்டனர் பரமலிங்கமும் சரி என்றால் எனக்கும் சரிதான் என்று கூறிவிட்டார். எம். பி.

பூமணி அரசகேசரிக்கு நெருங்கிய உறவு அவள் பத்தாவது படித்துவிட்டு, மேற்கொண்டு படிப்பைத் தொடரவா வேண்டாமா என்று மனதுக்குள் போராடிக் கொண்டிருந்த நேரம் — ''பூமணி, உன்னைப்போல படித்த பெண்கள் இப்படியான அபிவிருத்தித் திட்டங்களில் முழுசாய் ஈடுபடவேணும். அப்பொழுது தான் எங்கடை ஊர் முன்னேறும்!''

—அரசகேசரி அடிக்கடி அவளை இப்படி வற்புறுத்தி வந்தான். ''அண்ணை இப்ப புதுக்காடு நல்லாய் விளையும். போகப்போக அவ்வளவு சரிவராது. இனி தண்ணிப் பிரச்சனை இருக்கு...'' —பூமணி தயங்கினாள். ''எடி விசரி... நான் சொல்வதைக் கேள், இப்ப உடனடியாக இரண்டு குழாய்க்கிணறு வெட்டப்போகிறார்கள்! உனக்கு முன்னுக்குக் காணி எடுத்துத்தாறது என்னுடைய பொறுப்பு. செல்வியும் விண்ணப்பிக்கிறாள். நீ அப்பிளிக்கேசனை எழுதித்தா''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வி அரசகேசரியின் தங்கை. அவனின் வற்புறுத்தலின் பேரில் பூமணி காணிக்கான விண்ணப்பத்தை எழுதிக்கொடுத்தாள்

''இப்ப திட்டம் தொடங்கியவுடன் நீதான் தலைவியாய் இருக்கப்போகிறாய்!''– அரசகேசரி கூறிவிட்டுச் சென்றுவிட்டான்.

பூமணி, செல்வி உட்பட முதற்கட்டமாக இருபது பெண்கள் தெரிவுசெய்யப்பட்டனர். ஒட்டு மொத்தத்தில் அவர்கள் எல்லோரும் எம். பி. யின் பூரண ஆதரவாளர்களது குடும்பத்தைச் சேர்ந்தவர்களே.

பூஞ்சோலையிலிருந்து இருபது மைல் தூரத்தில் அமைந்துள்ளது முழங்கேணி. மிகப் பழமையான குளமும் பிள்ளையாருக்கு ஒரு சிறிய கோயிலும் அங்கு அமைந்திருந்தன. மன்னார் குடிக்குச் செல்லும் பேரூந்துகள் சிறிது நேரம் முழங்கேணியில் தரித்து விட்டுச் செல்லும். நாலு பெட்டிக் கடைகள் பெரிய விலாசங்களோடு கூடிய தேநீர்க் கடைகளாய்க் காட்சியளிக்கும். அதிலிருந்து இரண்டு மைல் தள்ளி மிகப்பழைய கொலனி ஒன்று உள்ளது. இரவு பகலாய்க்காடு அழிக்கும் வேலைகள் நடந்தேறின. அரச வாகனங்கள் முழுமையாகச் செயல்பட்டன. அரசகேசரி மனம் வைத்துத்தான் செயலாற்றினான்.

''புதுப்பெடியன் எண்டாலும் ஆள் வலு விண்ணன்'' — மாவட்டக்காணி அதிகாரி அரசகேசரியைத் தலையில் வைத்துக் கொண்டாடாத குறையாய்ப் புகழ்ந்தார். காடுதிருத்தும்பொழுது இரண்டு உழவுயந்திர லோட் விறகு அவருக்கு அரசகேசரி முதல் வாரம் அனுப்பி இருந்தான். அவருக்கு நிறைந்த சந்தோஷம்.

எம். பி. யின் விடாமுயற்சியால் இரண்டு வெளிநாட்டு நிபுணர்கள் முழங்கேணிக்கு வந்து இடத்தைப் பார்வையிட்டுச்சென்றனர் முதலில் ஒரு குழாய்க்கிணறு அமைக்கப்பட்டது. கிணற்றுக்கான பாதுகாப்பு அறையும் கட்டப்பட்டு டீசல் மோட்டார் இணைக்கப்பட்டு, அரசகேசரியின் சிறியதந்தை ஒருவர் காவற்காரனுகவும், இயந்திரம் இயக்குபவராயும் நியமிக்கப்பட்டார். கிணற்றிலிருந்து நீரைக் கொண்டு செல்வதற்கு பாரிய குழாய்கள் பொருத்தப்பட்டன.

ஆரம்பவிழா மிகவும் கோலாகலமான முறையில் நடந்தேறியது. அரசகேசரி காலில் சக்கரம் பூட்டியவன்போல் ஓடித்திரிந்து காரியங்களைக் கவனித்தான். எம். பி. யின் தொகுதி என்றபடியால் அத்தொகுதிக்கு அமைப்பாளராய் நியமிக்கப்பட்டிருந்த மந்திரி ஒருவரைத் திறப்பு விழாவுக்கு எம். பி. அழைத்திருந்தார். மாற்றுக் கட்சியாய் இருந்தபோதிலும் எம். பி. யின் வற்புறுத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலை அந்த மந்திரியால் தட்டிக்கழிக்கமுடியவில்லை. ஆனால் அது தான் காரணமாய் அமைந்திருக்கவில்லை. வேறொரு தொகுதியி லிருந்து தெரிவாகி மந்திரியாகி வந்த அவருக்கு இத் தொகுதி அமைப்பாளராய் வந்ததில் இருந்து இத் தொகுதி மேல் ஒரு 'மாறாத கண்,!

''அடுத்த தேர்தலுக்கு இது உதவியாய் இருக்கும்...''!

சந்தர்ப்பத்தை அவர் பயன்படுத்தத்தவறவில்லை. அரச வாக னங்கள் முழங்கேணிக்குப் படை எடுத்தன. பூரண கும்பம் பெரிய குலைகளுடன் சேர்ந்த வாழைகள், தோரணங்கள் என்று முழங் கேணிப் பிள்ளையார் கோவிலடி பெரிய அமர்க்களப்பட்டது.

''இருபது பெண்களும் மாலை மந்திரிக்கு போடவேண்டும்...

அரசகேசரி இருபது பெண்களிடமும் பணம் பெற்று மாலைகள் ஏற்பாடு செய்திருந்தான்.

மந்திரி கழுத்து முட்டிய மாலைகளால் திக்கித் திணறி விட் டார். மங்கள ஆரத்தி எடுத்து, வாழ்த்துக்கீதம் படித்து அவ ருக்கு அளிக்கப்பட்டது. தனக்கு அளிக்கப்பட்ட இந்தப் பெரிய வரவேற்பைக்கண்டு அவர் நெஞ்சம் நிறைந்தது. நன்றியுடன் திரும்பி எம்பியைப் பார்த்துப் புன்சிரிப்பொன்றை தன் பரந்த முகத்தில் தவழ விட்டார் ஓடியாடித் திரிந்து காரியங்களைக் கவ னித்த இளைஞன் அரசகேசரி அவரின் பார்வையைக் கவர்ந்தான். ''இவர் ஆர் ஆள்...! என்ன பெயர்...?'' எம்பியிடம் ஆர்வத் துடன் விசாரித்தார் மந்திரி.'' நம்ம செலக்ஷன் தான். அபிவிருத்தி உத்தியோகத்தர் பெயர் அரசகேசரி'' ''ஓ, அப்படியா...?— முகத்தைத் தடவிக்கொண்டே ''ஆளைக் கொஞ்சம் கூப்பி டுங்கோ'' என்றார். எம். பி. பரமலிங்கத்தைப் பார்க்க பரம லிங்கம் ஓடிப்போய் அரசகேசரியைக் கூட்டி வந்தான்.

''ஆள் பெரிய கெட்டிக்காரன் முழு விஷயமும் இவரின் பொறுப்பில்தான்!''... —எம். பி. அரசகேசரியை மந்திரிக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

நல்ல வேலை செய்திருக்கிறீர் தம்பி... கெட்டிக்காரன்...!'' மனமாரப் பாராட்டினார். அரசகேசரி மகிழ்ச்சியின் உச்சாணிக் கொப்புக்குச் சென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# [3]

முழங்கேணி மண் நல்ல சிவந்த மண். வாழை, வெங்காயம், மிளகாய்ப் பயிர்கள் நன்கு செழித்து வழர்ந்தன.

இந்த ஒரு வருட காலத்தில் இருபது பெண்களில் ஐந்து பேர் தங்கள் காணியை அபிவிருத்தி செய்வதில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. ஆனால் மிகுதிப்பேர் தங்கள் காணிகளை நன்கு வளப்படுத்தியிருந்தனர்.

மண் அவர்களை ஏமாற்றவில்லை. விளைபொருள்கள் பெருமளவில் பணத்தைத் தேடித்தந்தன.

அரசகேசரி ஒரு வாரத்தில் மூன்று நாட்கள் தனது மோட்டார் சைக்கிளில் முழங்கேணிக்கு வந்துவிடுவான். அரசு கொடுத்த சைக்கிள் அது. நல்ல பிரயாணப்படி கிடைத்தது மாதாமாதம்.

"விஷயங்கள் வெளி உலகத்துக்குத் தெரியவேணும்". அவன் அடிக்கடி சொல்லிக்கொள்ளுவான். பத்திரிகை நிருபர்களைப் பிடித்து முழங்கேணித்திட்டம் பற்றிய செய்திகளை அவ்வப்போது தவறாது போட்டுக்கொள்ளுவான்.

முழங்கேணியில் மாதர் சங்கம் அமைத்தால் நல்லது என்ற அபிப்பிராயம் திட்ட அங்கத்தவர்களிடம் தோன்றியது. அங்கு என்ன காரியம் என்றாலும் அது அரசகேசரி மூலம்தான். செய்ய வேண்டும் என்ற நியதி இருந்தது.

"திட்ட அதிகாரி நான். எனக்குத் தெரியாமல் நீங்கள் ஒரு அலுவலும் செய்யக்கூடாது. ஏஜிஏ இடம் ஏதாவது அலுவல் எண்டாலும் என்மூலம்தான் நீங்கள் செய்யவேண்ணும்" என்று அரசகேசரி திட்ட அங்கத்தவர்களுக்குக் கடும் நிபந்தனையை விதித்திருந்தான்.

மாதர்சங்கம் அமைக்கும் விஷயம் அவனின் பரிசீலனைக்கு வந்தது. பூமணிதான் அந்த யோசனையை எழுத்துமூலம் கொடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'' ஒரு கிழமைக்குப் பொறுங்கோ '' - இப்படிச் சொல்லிவிட்டு சென்றுவிட்டான். ஒரு வாரத்துக்குப் பின் அவன் திட்டத்துக்கு வந்தபோது மாதர் சங்கம் அமைக்கலாம் எனப் பச்சைக்கொடி காட்டினன்

'' அப்படி எண்டால் சங்கத்துக்கு ஒரு இடம் வேணும் '' முன்னுக்கு ரேட்டோடை ஒரு காணி இருக்குத்தானே. அதைத் தாருங்கோவன். ஒரு கொட்டிலை முதலில் போடுவம் '' - பூமணி கோரிக்கை விடுத்தாள்.

'' இப்போதைக்கு உன்னுடைய கொட்டிலில் கூட்டத்தைக் கூட்டி ஒழுங்குகளைப் பாருங்கோ பின்னுக்கு இடத்தைப் பற்றிப் பார்க்கலாம் ''

அவன் சங்கத்துக்கு இடம் ஒதுக்க மறுத்தது பூமணிக்கு மிகவும் மனத்தாங்கல்தான். ஆனல் அரசகேசரியை எதிர்த்து ஒன்றும் செய்ய முடியாதே!

தொகுதி அமைப்பாளர் கூட்டத்துக்கு மந்திரி தலைநகரிலிருந்து வந்திருந்தார். அவர் அங்கு வருவதற்கு ஒரு வாரத்துக்கு முன்னரே அரசகேசரிக்குக் கடிதம் எழுதியிருந்தார். தன்னை வந்து சந்திக்கும்படி. .

இதுவும் நன்மைக்குத்தான்! ' - அரசகேசரி தனக்குள் சொல்லிக் கொண்டான் கடிதம் வந்ததைப்பற்றி அவன் ஒருவரிடமும் மூச்சுவிடவில்லை

அமைப்பாளர் கூட்டம் ஒரு அரச சுற்றுப் பயணிகள் இல்லத்தில் இடம் பெற்றது. கூட்டம் முடியுமட்டும் மிகப்பொறுமையோடு அரசகேசரி காத்திருந்தான். மந்திரியைச்சுற்றி எத்தனையோ பேர் ஆனல் அரசகேசரியைக் கண்டதும் மந்திரி முகம் மலர்ந்து அவனை அழைத்துத் தனியாக அறைஒன்றுக்கு அழைத்துச்சென்ருர்.

''என்னுடைய கடிதம் கிடைத்ததுதானே''

'' ஓம் சேர் அதுதான் வந்தனுன் மிச்சம் நல்லது ''

''பூஞ்சோலை எப்படி இருக்கு? வசதிகள் எல்லாம் குறைஞ்ச இடம்... இல்லையா? ''ஓம் சேர் எங்கடை கிராமத்துக்கு எத்தனையோ தேவைகள் இருக்கு ஒருவரும் சரிவரக் கவனிக்கிறதாக எனக்குத்தெரியவில்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்கவலையை நீர் விடும் அதுகளைக் கதைக்கத்தானே உமக்கு நான் கடிதம் அனுப்பினனுன்,.

''நல்லது சேர்...''

''தம்பி, நான் சொல்வதைக் கவனமாகக் கேளும் உம்மைப் பற்றி நான் நிறையக்கேள்விப்பட்டிருக்கிறேன் உம்முடைய கிராமம் சகலவழிகளிலும் பின் தங்கி இருக்கிறது. இப்ப என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி நான் எவ்வளவோ செய்யலாம் செய்யப்போகிறேன்.

உத்தியோகம், நல்ல ஒரு பஸ் நிலையம், குடியேற்றத்திட்டம் இப்படி நான் கனதிட்டங்கள் மனதில வைத்திருக்கிறேன் இப்ப உம்முடைய ஒத்துழைப்புத்தான் எனக்குத்தேவை.விளங்குதோ ...?

அமைச்சர் கூறுவதையெல்லாம் திறந்த வாய் மூடாது அரசகேசரி கேட்டுக் கொண்டிருந்தான்.

''நீங்கள் சொல்வதைக்கேட்க எனக்கு மிகவும் சந்தோஷமாய் இருக்கிறது சேர்... நான் இப்ப என்ன செய்ய வேணும் ..?''

''உம்முடைய கிராமத்து இளைஞர்கள் எல்லோரையும் சேர்த்து ஒரு அமைப்பு உருவாக்கும். ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்யும். நான் வந்து எல்லா விபரங்களையும் அங்கு வைச்சு விளங்கப்படுத்துகிறேன்.''

''அதற்கென்ன சேர் . . என்னுடைய உறவினர்தான் அதில ஒரு பிரச்சனையும்வராது.''

''அது தெரிஞ்சுதானே உம்மையும் நான் தெரிவு செய்திருக்கிறேன். நீர் மற்ற ஆட்களைப்பற்றி ஒன்றுக்கும் கவலைப்படாதையும். உமக்குத்தெரிஞ்ச படிச்ச இளைஞர்களின் பட்டியலை எனக்கு அனுப்பும். எல்லாருக்கும் வேலை எடுத்துக்கொடுப்பேன். மற்றும் படி எம். பி. அவர் இவர் என்று நீர் பயப்படதேவையில்லை சகல உதவியும் உமக்கு நான் செய்வேன்.

அரசகேசரியின் கைகள் இரண்டையும் தன் கைகளால் பிடித்து குலுக்கி விடை கொடுத்தார் அமைச்சர்.

அரசகேசரி காற்றில் மிதப்பது போல் பூஞ்சோலைக்கு திரும்பி வந்தான் அவனின் உள்ளமெல்லாம் உவகையால் நிரம்பி இருந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தது. தனக்குத் தெரிந்தவர்களுக்கெல்லாம் உத்தியோகம் எடுத்துக் கொடுத்து, தான் நினைத்தவேலை எல்லாம் செய்வித்து... அவனின் கற்பனை விரிந்தது

பூஞ்சோலையில் ஒரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது கிராமத்தில் வேறு பெரிய கடைகள் கிடையாது· உப்புத் தொடக்கம் சகல பொருள்களும் இந்தச் சங்கமே பக்கத்து நகரத்திருந்து லொறிமூலம் கொண்டு வந்து தன்கிளைகள் மூலம் விநியோகம் செய்கிறது. எல்லா ஊர்களிலும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அமைப்புகளுக்குப்பரிபாலனம் செய்யபதவிகள் வகிக்க பெரும் போட்டிகள் நிலவியது பூஞ்சோலைக் கிராமத்திலும் இந்தப் பதவிக்காய்ச்சல் பரவியது. பரமலிங்கம், தான் இந்சங்கத்தில் தலைவராக வரவேண்டுமென்று ஆசைப்பட்டு விட்டான். தனது ஆசையை எம்பியின் காரியதரிசியிடம் சூசகமாகத் தெரிவித்தான். அவன் ஒரு பதவிக்கு ஆசைப்பட்டால் அதைச் செய்து கொடுக்க எம்பிதான் எப்பொழுதும் தயாராக இருக்கிறுரே. எம்பியின் ஒத்துழைப்புடன் - தேர்தலில் வெற்றி பெற்றுப் பரமலிங்கம் பூஞ்சோலைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவனுகிவிட்டான்.

ஊர்மக்கள் இப்பொழுது அவனைத் தலைவர் என்று அழைக்க ஆரம்பித்து விட்டனர். அப்படிமற்றவர் அழைப்பதைக்கேட்பதில் பரமலிங்கத்துக்கு ஒரு சுகங் கலந்த கிளுகிளுப்பு! கடைத் தெருவில் மடிப்புக் கலையாத உடுப்புகளுடன் தினமும் வீரநடை போட்டவன், இப்பொழுதெல்லாம் காலையில் எட்டு மணிக்குச் சங்கத்துக்குப் போய்விடுவான். பகல்முழுவதும் சாப்பிடும் நேரத்தைத் தவிர அவனது பொழுது சங்கத்திலேயே கழிந்தது.

சங்கம் வியாபாரத்தோடு மட்டும் தன் சேவையை மட்டுப்படுத்தவில்லை. பக்கத்து நகரத்திலிருந்து பூஞ்சோலைக்கு வருவதென்றால் உப்பங்கால்வாயைக் கடந்துதான் வரவேண்டிய சூழ்நிலை. கால்வாய் படகுச் சேவையையும், மோட்வாகனங்கள் ஏற்றிச் செல்லும் பாதைச்சேவையும் சங்கம் கொந்தராத்து அடிப்படையில் அரசாங்கத்திடம் இருந்து பெற்றுகொண்டது. இப்பொழுது சங்கத்தின் பணியாட்களும் பெருகிவிட்டனர். பணிகளும் பெருமளவில் பரவியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமலிங்கம் தலைகால் தெரியாமல் தவித்தான். இருந்தாற் போல் ஒரு கிளைக்கு, சங்கமனேஜரையும் அழைத்துக் கொண்டு திடீர்ப் பரிசோதனை செய்யப்போவான் எந்த ஒரு கிளையிலும் கணக்கு வழக்கு என்றுமே சரியாய் இருந்தது கிடையாது. ஒவ்வொரு பரிசோதனையிலும் ஒரு பிழையைக் கண்டுபிடித்துக் கிளைமனேஜரை வேலையிலிருந்து இடைநிறுத்திவைப்பதற்கான வேலைகளை மிகத் துரிதமாகச் செய்வான். வேலையிலிருந்து நீக்கப் பட்டவர்கள் நாளும் பொழுதும் இவன் தயவை நோக்கித் திரிவார்கள். இரண்டுமாதங்களுக்கு அலைய விடுவான். பின் இயக்குநர் சபையைக் கூட்டி ஏதோ சரிக்கட்டி அவர்களை மறுபடிவேலையில் சேர்த்துக்கொள்ளுவான். மறுபடி வேலைக்கு எடுபட்டவர்கள் பின் இவனின் பேச்சுக்கு மறுபேச்சுப்பேசமாட்டார்கள்.

''பரமலிங்கம் வந்த பிறகு தான் சங்கம் ஒழுங்காக நடக்கிறது'' - இப்படி எம். பி அடிக்கடி சொல்லிக் கொள்வார். அந்த வார்த்தைகள் பரமலிங்கத்துக்குப் பலமான அத்திபாரமாக அமைந்து விட்டது. அவன் இரண்டு வருடங்கள் தனிக்காட்டு ராஜாவாகத் திரிந்தான்.

அவன் புதிதாக ஒரு வீடு கட்டிக்கொண்டான். புதிய ஒரு மோட்டார் சயிக்கிளை விலைக்கு வாங்கிப் புதிய மிடுக்குடன் அதில்ஏறி ஊரை வலம் வந்தான்!

திட்டத்தில் பிரதான வீதிக்குச் சமீபத்துக்காணிகள் திறமையான முறையில் அமைந்து விட்டன. ஆனல் பின்புறப்பகுதியில் அமைந்த காணித்துண்டுகள் மறுபடியும் மந்து வளர்ந்து சிறுகாடாகவளரும்நிலை தோன்றியது. மாதாமாதம் நடைபெறும் திட்டக்கூட்டத்தில் அரசகேசரி அக்காணிக்குரியவர்களை திட்டித் தீர்ப்பான். குறிப்பிட்ட ஐந்து காணிகளுக்குரிய பெண்கள் நிலை பெரிதும் திண்டாட்டமாய் இருந்தது. அவர்களின் காணிகளுக்குப் பின்புறமாக பெருங்காடு அமைந்திருந்தது. அவர்கள் என்ன பயிர் செய்தாலும் பன்றிகள் கூட்டம் கூட்டமாய் வந்து பெரும் நட்டங்களை ஏற்படுத்தின.

"என்ன சேர் மிருகங்களாலை எல்லாப் பயிரும் அழியுது நாங்கள் என்ன செய்ய ... ?

ஐவரில் ஒருத்தி துணிஞ்சு கேட்டாள்

''நீர் இப்பிடிக் கதைக்கவேண்டாம் மிருகங்கள் எங்கைதான் இல்லை ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ன மாதிரியெண்டாலும் பயிர் செய்யத்தான் வேணும். அங்கு குடியிருக்கத்தான் வேணும்'' - அதிகாரத்தோடு அரசகேசரி பதில் கூறினுன்.

திட்டத்தில் ஒவ்வொருவரும் தத்தமது காணிக்குள் சிறு கொட்டில்களை அமைத்துத்தான் குடியிருந்தனர். வசதிகள் மிக மிகக் குறைவுதான். ஆனுல் அரசாங்கம் அளித்திருந்த வாக்குறுதி களும் அவற்றைத் தன் வார்த்தைப் பிரயோகங்களால் மேலும் அலங்கரித்த அரசகேசரியின் வாக்குறுதிகளும் தான் எதிர்காலம் பிரகாசமாய் அமையப்போகின்றது என்ற நம்பிக்கை திட்டப் பெண்களிடம் ஏற்படுத்தியிருந்தன.

''வசதி உள்ள வீடு மூன்று வருஷங்களில் மானிய அடிப்படை யில் கட்டித்தரப்படும்'' இது அரசின் வாக்குறுதி.

அந்தக் குறிப்பிட்ட ஐந்து பெண்களும் தமது கொட்டில்களில் கூடக்குடியிருக்கவில்லை. கொட்டில்கள் வெறுமனே கிடந்தன.

இருபது பெண்களும் பூஞ்சோலைக் கிராமத்தைச் சேர்ந்த வர்கள் தான் என்ருலும் இந்த ஐவரும் ஒரு விதி விலக்காச் செயல் பட்டனர். சனி,ஞாயிறு இரு நாட்களில் மட்டும் திட்டத்துக்கு வரும் வழக்கத்தைக் கைக்கொண்டனர் அவர்கள் காணிகளில் அபிவிருத்தி செய்யாமல் உள்ள நிலையில், மந்துக்காடுகள் வளர அங்குவந்த மிருகங்கள் மற்றக்காணிகளுக்குள்ளும் ஊடுருவத் தொடங்கின. இது மற்றப்பெண்களுக்கும் ஒரு தலையிடியைக் கொடுக்க ஆரம்பித்தது.

''உங்களுக்குப் பல முறை சொல்லி விட்டேன். இது கடைசி எச்சரிக்கை இன்னும் ஒரு மாதத்தில் வந்து காணியில் குடியிருந்து காணியைத் திருத்தாவிட்டால் காணியைக் கான்சல் பண்ணிப் போடுவன்'

ஒரு மாதாந்தக் கூட்டத்தில் இப்படி எச்சரிக்கைவிடுத்தான் அரசகேசரி.

''பைப்தண்ணி அங்கை வருகுது இல்லை... அதைப் பற்றி நாங்கள் எழுதிப் போட்டம், நீங்கள் கவனிக்கவில்லை சேர்...'' தயங்கியபடி ஒரு பெண் கூறினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வாயை மூடு . உனக்கு ஒவ்வொரு நாளும் ஒரு சாட்டு அந்த இந்தக் கதை வேண்டாம் . இதுதான் கடைசி எச்சரிக்கை—

''கூட்டம் முடிந்து விட்டது. காணிகளைக் கான்சல் செய்வது பூமணிக்குத் துளியும் இஷ்டமில்லை அக்காணிகளில் மந்து வளர்ந்து மற்றக் காணிகளுக்கு ஒரு பிரச்சனையாய் இருந்தாலும் கான்சல் செய்வது என்ற காரியம் அவளுக்குப் பிழையாகப்பட்டது.

''அவை சொல்லுற நியாயம் சரிதானே... மிருகங்கள் தொல்லை இருக்கு... இனி தண்ணியும் அந்தக் காணியளுக்குப் போவது கஷ்டமாய் இருக்கு... இவைகளை நீங்கள் தானேபார்த்துச் செய்ய வேண்டும்... கான்சல் செய்யிறது அவ்வளவு சரியில்லை...''

''ஓகோ. . ! நீ எனக்கு நியாயம் சொல்ல வந்து விட்டாய்! அதெல்லாம் எனக்குத் தெரியும்... நீ உன்னுடைய அலுவலைப்பார் தெரியுதே''- அரசகேசரியின் உதடுகள் கோபத்தில் துடித்தன.

''நீங்கள் இப்படிப் பேசக்கூடாது! பம்ப் ஒப்பறேட்டர் இப்ப மூன்று நாட்களாய் இஞ்சை இல்லை...! மிளகாய்க்கன்றுகளுக்கு நேற்றைக்கும் தண்ணி விடவில்லை .. எல்லாப் பயிரும் வாடிப் போய் நிக்குது... அவை எல்லாம் தலைவி என்ற முறையில் என்னட்டை முறைப்பாடு செய்திருக்கினம். .நான் கதைக்கத் தானே வேண்டும்...''

''கடைசியாய் பம்ப் ஒப்பறேட்டரி பழியைப் போடுகினமோ ...?

''பழிபோடவில்லை, உண்மையைத் தான் நான் சொல்லுறன். அவர் மூன்று நாட்களாய் இஞ்சை இல்லை. முந்தியும் இப்படிப் பலமுறை செய்து போட்டார்.

இப்படி அவர் தன்னுடைய இஷ்டத்துக்கு நடந்தால் எங்களுக்குத்தானே நட்டம் நீங்கள் அவரை விலத்திப் போட்டு வேறை ஆளைப் போடலாம் தானே?''

வெகு இயல்பாகத்தான் கூறினுள் பூமணி. '' நீ அந்தக் கதை கதைக்கத்தேவை இல்லை ஆரை வேலைக்கு வைக்கிறது ஆரை விலத்த வேணும் என்று எனக்குத் தெரியும். மோட்டரிலை பிழை இருக்கு... ''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைத்திருத்த வேணும் என்று எல்லா அங்கத்தவர்களிடமும் காசை சேர்க்கச் சொல்லி நான் சேர்த்துத் தந்தன் யாரோ ஒருவர் வந்து ஏதோ திருத்தினுர், பழைய படியும் மோட்டர் பிழைக்குது இதை எல்லாம் நீங்கள் கவனிக்கவேணும்"

"இஞ்சைவா பூமணி, நீ எனக்கு வேலை படிப்பிக்க வேண்டாம் விளங்குதோ உன்ரை அலுவலை நீ பார். மற்றது நான் பார்த்துக் கொள்ளுவேன்."

கோபத்தில் கத்திவிட்டு அரசகேசரி மோட்டார் சைக்கிளில் ஏறினுன். "இவளவையைக் கதைக்க விட்டதாலை வந்த பிழை! இவ ஒரு தலைவி ... அவவின்ரை நியாயங்கள் ...!" - வாய்முணுமுணுக்க முழுவேகத்துடன் சைக்கிளைக் கிளப்பினுன். அவன் போவதையே பூமணி பார்த்துக் கொண்டு நின்ருள்!

"என்ன பூமணி தலைவர் கத்திப் போட்டுப் போருர்..." — பக்கத்துக்காணிக்குரிய கமலா வந்து நின்ருள்.

"இல்லையடி அவருக்கு நியாயம் சொல்ல முடியாது போலை கிடக்கு. பம்ம் ஒப்பறேற்றர் மூன்று நாளாய் இல்லை எண்டு. சொல்ல அவருக்கு கோபம் வந்திட்டுது."

"எடி விசரி... பம்ப் ஒப்பறேற்றர் தலைவருடைய சித்தாப்பா எண்டு உனக்குத் தெரியும்தானே... சொந்தக் காரனைப் பழி சொன்னுல் அவர் விடுவாரே?" அப்ப "நாங்கள் வாய்மூடிக் கொண்டு இருக்க வேணுமே? ஒரு நியாயமும் சொல்லக் கூடாதே?" —பூமணியின் குரலில் சத்திய வேட்கை தொனித்தது.

"பூமணி, நான் கொஞ்ச நாளாய்க் கவனிச்சுக்கொண்டு வாறன் ... ஆரம்பத்திலை எங்களுக்கு ஒரு இழவும் விளங்கவில்லை. தலைவர் தான் நினைச்ச மாதிரித்தான் இப்ப எல்லா அலுவலும் பார்க்கிருர். பம்ப்ஹவுசுக்குப் பக்கத்துக்காணி புறம்போக்குத் தானே.......அதிலை இப்பஆர் வாழைநட்டிருக்கினம் தெரியும்தானே நாங்கள் கூட்டத்திலை என்ன தீர்மானிச்சது எண்டு உனக்குத் தெரியும்தானே...?"

"எனக்குத் தெரியும். நாங்கள் அதைத்திருத்தி மாதிரித் தோட்டம் ஒன்று எல்லாருமாய்ச்சேர்ந்து செய்ய யோசித்த போது அதிலை திட்டத்துக்குக் கந்தோர் கட்டவேணும், ஒருவருக்கும் தரமுடியாது எண்டு சொல்லிப்போட்டுஇப்பகனகலட்சுமியை தோட்டம் செய்ய விட்டிருக்கிறர்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீ தலைவி எண்டு இருக்கிறாய் இதைக் கேட்கலாம் தானே?"

"உண்மையிலை நான் இதை முன்னரே கேட்டிருக்கலாம்தான்; வாற புதன்கிழமை எங்கடை சங்கக்கூட்டம் இருக்குத்தானே எல்லாரும் கதைச்சு இதுக்கு ஒரு முடிவு எடுப்பம்"

":கட்டாயம் இதைச் செய்ய வேணும் பூமணி. கனக லட்சுமிக்கு ஏன் இந்தச் சலுகை? அப்படி அவவுக்கு ஒருசட்டம் எங்களுக்கு ஒரு சட்டமெண்டால் நாங்கள் இதைப்பற்றித் தலைவரோடை கதைச்சுப் போட்டு சரிவராட்டி ஏ ஜிஏக்கு ஒரு பெட்டிசம் எழுதித் தெரிவிப்பம். அவர் வந்து விசாரிக்கட்டும்".

# [4]

கனகலட்சுமி பூஞ்சோலையில் படித்துவிட்டுப் பின்னர் சிறுகுளம் சென்று அங்கு ஒரு சிறுவர் பாடசாலையில் ஆசிரியையாக வேலை பார்த்து, பின்னர் அதைவிட்டு வந்து பூஞ் சோலையில் தானே ஒரு நேசறி வகுப்பு ஆரம்பிக்க யோசனை செய்துகொண்டிருந்த காலத்தில், அரசகேசரியின் தூண்டுதலால் முழங்கேணித் திட்டத்துக்கு வந்து சேர்ந்தாள்.

"உருப்படியான வேலை ஒன்றும் நடக்கவிடமாட்டாள். வாய் தான் தவிரவேறென்றுமில்லை..."— அவளைப் பற்றித் திட்டத்தில் நிலவிய பொதுவான ஒரு கருத்து இது. பொதுவாக அது உண்மை தான். திட்டக்கூட்டம் நடைபெறும் போதெல்லாம் கனகலட்சுமி அடிக்கடி குறுக்குக் கேள்விகள் கேட்டுச் சலசலப்பை உண்டாக்கு வாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" இவளவைக்கு என்ன தெரியும்? இந்தப் பூஞ்சோலைக்குள் இருந்து கிணற்றுத் தவளையள் மாதிரி ... வெளியிடங்களுக்குப் போகவேணும் ... ஐந்தாறு இடத்தைப் பார்க்கவேணும் ... ஒரு திட்டத்திலை தலைவிப்பதவி எடுத்துத் தோட்டம் செய்தாப்போலை எல்லாம் தெரிஞ்சது என்று நினைப்பு ...! "

அவளுக்குத் திட்டத்தலைவி பூமணிமீது எப்பவும் ஒரு வெறுப்பு தான் படித்தவள் என்பதை மற்றவர்களுக்கு எடுத்துச் சொல்ல வேணுமென்று சதா நினைத்துக்கொள்ளுவாள். ஒருமுறை கூட்ட அறிக்கை வாசிக்கும்போது வாய் தடுமாறி ஏதோ பிழையாக வாசித்துவிட, அவள் அதைப், ' பிடித்து ' க் கொண்டாள்.

" அதுக்குத்தான் சொல்லுறது இப்படியான பதவிகளுக்குப் படிச்ச ஆட்களை வைக்க வேணும் என்று ... "

பூமணிக்குக் கோபம் வந்துவிட்டது. " கனகலட்சுமி, நீ மட்டும்தான் படிச்சவள் இல்லை. நானும் உன்னுடைய அளவுக்கு படிச்சிருக்கிறன் ... "

" உன்ரை படிப்புத்தான் "

" என்னடி சொன்னனி? "

பூமணி "நெருங்கி" விட்டாள்.

" சொன்னால் என்னடி செய்வாய்? " கனகலட்சுமியும் இருந்த இடத்தைவிட்டு எழுந்தாள். ஆனால் பக்கத்தில் இருந்த பெண்கள் விலக்குப் பிடித்துவிட்டபடியால் ஒரு அடிபிடி தவிர்க்கப்பட்டது இருவரது மனங்களிலும் மாறாத பகைமை உணர்வுக்கு இச் சம்பவம் வித்திட்டது. இச் சச்சரவு அரசகேசரியின் கவனத்துக்கு வந்தபோது அவன் பூமணியின் மீது துள்ளி விழுந்தான்.

' உனக்கென்ன கனகலட்சுமி யோடை கதை... திட்டத்திலை சண்டை சச்சரவு எண்டால் சரிவராது. அதுக்கு வேறை இடத்தைத்தான் பார்க்கவேணும்"

"நீங்கள் அப்பிடி ஒரேயடியாய் என்னிலை பழி சொல்ல வேண்டாம். அவள் என்ன சொன்னவள் என்று நீங்கள் விசாரிக்க வேணும்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''என்ன விசாரணை .. பூமணி நீ எனக்குச் சொந்தக்காரி என்று தான் உன்னைத் தலைவியாக்கி விட்டனுன்...! இதோடை நிற்பாட்டிக்கொள் இப்படியான சச்சரவுகளை'' அரசகேசரி எச்சரிக்கை செய்தான். பூமணி மௌனமாய் இருந்துவிட்டாள்.

முழங்கேணியில் நடந்த விஷயங்கள், நடக்கும் விஷயங்கள் யாவும் மெல்ல மெல்லப் பூஞ்சோலைக் கடைத் தெருவில் தினமும் அலசி ஆராயப்படும்சங்கதியாய் ஆகிவிட்டன.

திட்ட அங்கத்தவர்களது பெற்றோர், சகோதரர்கள் என்று பலரும் திட்டத்தில் பெண்களுக்கு இடைக்கிடை உதவி செய்யவும், சிலசமயம், துணையாகவும் முழங்கேணிக்குப்போய்த் தங்குவது வழக்கம்.

பூமணியின் தமையன் சுப்பிரமணியம் பூஞ்சோலைக் கடைத் தெருவில் சிறிய தட்டிவான் ஒன்று வைத்திருந்து வாடகைக்கு ஓட்டிச் சீவியம் நடத்தி வந்தான். பூஞ்சோலையில் 'முறட்டு மணியம்' என்றல் தெரியாதவர் இல்லை

பூமணி திட்டத்தில் நடக்கும் தில்லுமுல்லுகள் பற்றி இடைக்கிடை வீட்டில் சொல்லி வைத்துள்ளாள் கனகலட்சுமியும், பூமணியும் வாக்குவாதப்பட்ட சம்பவமும் வீட்டாருக்குத்தெரியும்

''கொண்ணைக்கு சொல்லிப் போடாதை மோனை... அவன் முறட்டு வேலை செய்து போட்டு வந்திடுவான்... உனக்குத்தான் கரைச்சல் ... '' — பூமணியின் தாய் மகளை எச்சரித்தாள்.

பூஞ்சோலையில் பலரும் பரமலிங்கத்திடம் இவைகளைப்பற்றிக் கதைத்தனர்.

''பெடியன் அவ்வளவுபிழை விடான்... பார்ப்பம்' ."- பரமலிங்கம் சொல்லிவைத்தான்.

ஆனல் திட்ட அங்கத்தவர்களின் சகோதரர்கள் இருவர் தங்கள் சகோதரிகளுடன் நேரே எம். பி.யிடம் சென்று அவரிடம் திட்டக் குறைபாடுகள் பற்றி எழுத்து மூலம் புகார் ஒன்றைக் கொடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்.பிக்கு ஒரே குழப்பமாய் இருந்தது. தான் கவனிப்பதாகச் சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார். இவர்கள் தந்த புகார்க்கடிதத்தைத் தனது ஜீப் சாரதி மூலம் பரமலிங்கத்துக்கு அனுப்பிச் சம்பவங்களை விசாரித்துத்தனக்கு ஒரு செய்தி அனுப்புமாறு சொல்லிவிட்டார் எம். பி. பரமலிங்கம் புகார் முழுவதையும் வாசித்தான் அவனுக்கு மிகுந்த ஆத்திரம்!

''எட இவங்கள் என்னட்டை வராமல் நேரிலை எம்பியிட்டை போட்டினம் வரட்டும்... ''என்று கறுவிக்கொண்டான்.

கடைத்தெருவில் எம்பியிடம் போனவர்களில் ஒருவரைச் சந்தித்தான்.

''என்னமுருகேசு, இஞ்சை நான் இருக்கிறன் நீ போய் எம்பியிட்டைப் பெட்டிசம் எழுதிக் கொடுத்திருக்கிறுய் ..''

''அண்ணை உங்களிட்டைப் பலமுறை நேரிலை சொல்லிப் போட்டுத் தான் இதை எழுதிக் கொடுத்தனுங்க... முழங்கேணியில் அரசகேசரியின் அட்டுழியம் தாங்க முடியாதாம்.. என்ரை தங்கச்சி, தான் திட்டத்தை விட்டுப் போட்டு வரப் போறுளாம். இந்தமுறை மிளகாய்க்கண்டு நட எவ்வளவு செலவளிச்சது எண்டு உங்களுக்குத் தெரியுமே? இப்ப தண்ணி இல்லையாம் மோட்டர் பழுதாப் போச்சாம். பம் ஒப்பறேற்றர் லீவிலையாம். இதையெல்லாம் நீங்கள் யோசிக்காமல் என்னட்டைக் கோபிக்கிறியள்... !''

...''அப்படியே சங்கதி? நீபோ நான் அதை வடிவாய் விசாரித்துப் போட்டுச் சொல்லுறன்''

அன்றுமாலை பூஞ்சோலைக் கடைத்தெரு வாசிகசாலைக் கூட்டம் நடந்தது. பரமலிங்கம் தான் வாசிகசாலைத் தலைவர். அரசகேசரி பொருளாளர் பதவி வகித்தான். கூட்டத்திற்கு அவனும் வந்திருந்தான்.

''என்னடா தம்பி முழங்கேணித்திட்டம் பற்றி ஒரே முறைப்பாடாய்க்கிடக்கு ...''

''முறைப்பாடோ.? யார் வந்து உங்களிட்டைச் சொன்னது?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆர் வந்து சொன்னதெண்டு கேக்காதை தம்பி என்ன நடந்ததெண்டு சொல்லும்...'' — பரமலிங்கத்துக்குச் சாடையாகக் கோபம் தலைக்கேறியது.

''திட்டத்தைப் பற்றியும் அங்கையுள்ள பிரச்சனைகள் பற்றியும் இப்பநான் சொல்லப் போனுல் உங்களுக்கு விளங்காது அண்ணை''

''விளங்காதோ? அப்ப ஆருக்கு விளங்கும்?''

உங்களுக்கு விளங்காது. இதிலை ஏன் நீங்கள் வீணுகத்தலையிடுகிறீர்கள்? திட்டவேலைகள் எனக்குத் தெரியும் தானே.''

''அரசகேசரி, நான் தலையிடாமல் வேறையார் தலையிடுவது? எம்பியும் இதைப்பற்றி அறியவேணும் என்று சொல்லி அனுப்பியிருக்கிருர். இப்ப நான் ஒரு அறிக்கை அனுப்பவேணும்''

''எம். பி விருப்பமெண்டால் என்னட்டைக் கேட்கட்டும். நான் சொல்லிக் கொள்ளுவன்.

''என்ன கதை எல்லாம் படுபிழையாய்க்கிடக்கு நீ எல்லாவற்றையும் மறந்து விட்டாய் போலை கிடக்கு. அத்திவாரத்தை மறக்கக்கூடாது தம்பி''

''அண்ணை நீங்கள் சொல்லுறது எனக்கு விளங்குது. ஆனுல் தயவு செய்து இனி இப்படி மறைமுகமாய்க் கதைக்க வேண்டாம் என்னுடை அலுவல்கள் எனக்குத் தெரியும். உங்கடை யூனியனிலை என்னென்ன பிழையெண்டு எனக்கும் தெரியும் நான் எப்பவாகிலும் அதைப்பற்றிக் கதைச்சனுனே?''

''யூனியனிலை என்ன பிழை? யூனியனைப்பற்றி நீர் கதைக்கத் தேவையில்லை இப்ப முழங்கேணித்திட்டத்தைப்பற்றித்தான். கதை அதுக்கு மறுமொழி சொல்லும்.

''யூனியனைப்பற்றி நான் கதைக்க முடியாதென்ருல் திட்டத்தைப்பற்றியும் நீங்கள் கதைக்க முடியாது. ஆனுல் கொஞ்ச நாளிலை தெரியும் யூனியனைப்பற்றிய சங்கதி''

''என்ன கனக்கக் கதைக்கிருய்?'' - பரமலிங்கம் கதிரையை விட்டு எழுந்தான்.

''சரி சரி விடுங்கோ கதையளை ... இதென்ன சண்டை ...'' பக்கத்தில் நின்றவர்கள் விலக்குப்பிடித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகேசரி போய் விட்டான்.

இரவு முழுவதும் பரமலிங்கம் நித்திரை கொள்ளவில்லை.

# [5]

பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் பணிமனை தான் அரசகேசரியின் அலுவலகமாகும். தனது மாதந்த வேலைத் திட்டத்தை மாதம்முதலாம்திகதி உதவி அரசாங்க அதிபரிடம் கொடுத்து ஒப்புதல் பெறவேண்டும்.

திங்கள் புதன் ஆகிய இரு கிழமைகளில் அவன்வேலைத்திட்டத்தின் பிரகாரம் அலுவலகத்தில் இருக்க வேண்டும. மற்றைய மூன்று நாட்களும் வெளிக்கள அலுவல்களுக்காக அவன்பயன் படுத்தலாம்.

அன்று திங்கட்கிழமை.

ஏஜிஏ தனக்கு வந்திருந்த கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். முழங்கேணிப் பெண்கள் திட்ட அங்கத்தவர்கள் எட்டுப்பேர் பூமணியின் தலைமையில் கையொப்பமிட்டுப் பெட்டிசம் ஒன்றை அனுப்பியிருந்தனர். திட்டத்தில் மிருகங்களின் தொல்லை, தண்ணீர்த் தட்டுப்பாடு. பம்ப் ஒப்பறேற்றரின் அலட்சியம் எல்லாம் விபரமாக அதில் எழுதியிருந்தனர்.

அரசகேசரியை அழைத்து ஏஜிஏ இவைபற்றி விசாரித்தார்'

''திட்டம் இப்பொழுதுதானே தொடங்கினேம். எங்கையும் இப்படியான தொல்லைகள் இருக்கத்தான் செய்யும். பம்ப் ஒப்பறேற்றர் இரண்டு கிழமையாய்ச் சுகமில்லாமல் லீவு போட்டிருக்கிறர். இந்தப் பெட்டையள் எழுதியிருக்கிறமாதிரி அப்பிடி ஒன்றும் பிழையாக நடக்கவில்லை. இனி அவையளுக்குளை ஒற்றுமை இல்லைப் பாருங்கோ. சின்னச் சின்ன விஷயங்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெல்லாம் சண்டையும் சச்சரவும் தான். ஐஞ்சாறு பெட்டையள் இன்னும் காணியிலே குடியிருக்க வரவில்லை. நான் ஒரு நல்ல றிப் போட் உங்களுக்குத் தாறன். நீங்கள் அவையின்ரை காணியளைக் கான்சல் செய்ய சிபார்சு செய்து தாங்கோ. மிச்சம் நான் பார்க்கிறன்'' — மூச்சு விடாமல் கூறினான் அரசகேசரி.

''அதுசரி, அப்ப நான் உம்மோடை வாறகிழமை முழங்கேணிக்கு வாறன். இரண்டு பேரும் இன்ஸ்பெக்ற் பண்ணி ஒரு முடிவு எடுப்பம்''

''வாறகிழமை வேண்டாம்.. நான் கொழும்புக்கு ஒரு அலுவலாய்ப் போகவேணும். அதுக்கு அடுத்தகிழமை போவம்''

அப்பசரி. ஜீப்பும் இல்லைத்தானே. இரண்டு கிழமைக்குப் பிறகு போவம்''

விசாரணை முடிவடைந்தது அரசகேசரியின் மூளை வெகு வேகமாக இங்கத் தொடங்கியது.

பூஞ்சோலையை அடுத்து. அயல் குறிச்சிகளான செப்பனூர் குளம், பல்லவன்பேட்டை, வேரவில்பேட்டை, இரணைக்கேணி, கவுதாரிக்கேணி ஆகிய இடங்களுக்குத்தன் மோட்டார் சைக்கிளில் சூறுவளிப் பிராயணங்களை மேற்க்கொண்டான் அவன். அந்தக் குறிச்சிகளில் உள்ள ஜி. சி. ஈ. 'ஓ' லெவல். ஏ' லெவல் கல்விச்சான்றிதழ் பெற்றும் வேலையற்று வீட்டில் இருந்து பொழுது போக்கி கொண்டிருந்த இளைஞர்கள், யுவதிகளை தனித்தனியாகவும் குழுக்களாகவும் சந்தித்தான்.

''எங்கடை ஊர் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று சாபக்கேடா என்ன?

''படித்தும் உங்கள் தகுதிக்கேற்ற உத்தியோகம் கிடைக்காமல் நீங்கள் வாழ்நாள் முழுவதும் இப்படியே இருக்க வேண்டுமா?

''நாங்கள் இப்படி வாய்மூடி மௌனிகளாய் இருக்கிறபடியால் தானே பரமலிங்கம் மாதிரிப் படியாதவர்களெல்லாம் இன்று பெரிய மனிதர்களாகி விட்டனர்''.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''மற்ற இடத்து ஆட்கள் உத்தியோகம் என்று சொல்லி வந்து எங்களை சுரண்டிக் கொண்டுபோக நாங்கள் இடமளிக்கலாமா?

அரசகேசரியின் உணர்ச்சி மயமான வார்த்தைகள் அந்தக் கிராமத்து இளம் நெஞ்சங்களைச் சிந்திக்கவைத்தது.

''அரசகேசரி சொல்வது உண்மைதானே?''

''எத்தனை நாளைக்கு மற்றவன் எங்களைச் சுரண்ட விடுவது? இப்படிக் கேள்விகளை தம்முளே கேட்டுக் கொண்டனர் இளைஞர்கள்

''உத்தியோகம் உடன் தேவை'' — படித்த இளைஞர்களும் யுவதிகளும் தங்களுக்குரியகுரலை ஓங்கச்செய்யச் சித்தமாயிருந்தனர்.

''பூஞ்சோலை பூஞ் சோலை மக்களுக்கே?'' — இப்படியும் சிந்தித்தனர்.

இரவு இரவாய்க் கூட்டங்கள் கூடினர்.

தீர்க்கமான முடிவுகளை அதுவும் உடனடியாகக் காணத் துடிதுடித்தனர்.

அரசகேசரியைப் பின்பற்றுவது, அவன் வழி நடப்பது என்று யாவரும் ஒரு முகமாய் முடிவு எடுத்தனர்.

மந்திரி தான் பூஞ்சோலைக்கு வரும் திகதியை அரசகேசரிக்கு அறிவித்து சகல ஏற்பாடுகளும் செய்யச் சொல்லிக் கடிதம் அனுப்பி இருந்தார். மிக இரகசியமாகக் காரியங்கள் ஒப்பேறின. அரசகேசரி இரவு பகலாய் யந்திரமெனச் செயல்ப்பட்டான். ஆனல் பூஞ்சோலையில் எந்தஒரு' இரகசியத்தையும் காப்பாற்றும் திறமை ஒருவருக்கும் இல்லை.

பரமலிங்கத்துக்கு விஷயம் எட்டியது அவனுக்குத் தேகம் எல்லாம் பதறியது பூஞ்சோலையில் இதுவரை காலம் அவனுக்குத் தெரியாமல் எந்த ஒரு அரசியற் கூட்டமோ கருத்தரங்கோ நடந்தது இல்லை! இதென்ன புதுகுழப்பம்' என நினைத்துத் தன்னுள்ளே கிடந்து மனம் புழுங்கினுன் பரமலிங்கம். முழுவிபரமும் அறிய முடியாமல் தவித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''எட சனியன் இந்த நேரம் பார்த்து எம்பியும் வெளிநாட்டுக்குப் போய்விட்டாரே ...' — அரசகேசரியை நினைக்க நினைக்க அவனுக்கு ஆத்திரம் எல்லை மீறியது. இருவாரங்களாக, வழக்கமாகப் பூஞ்சோலைக் கடைத்தெருவில் அவனைக் கண்டால் 'அண்ணை' என விழித்துச்சற்று நேரம் கதைத்து விட்டுப் போகும் சில இளைஞர்கள் தன்னைக் கண்டதும் காணுதமாதிரிப் போவதைக் கண்கூடாகக் கண்டான் அவன்.

இப்பொழுது அவனுக்கு எல்லாம் தெளிவாகப் புலப்பட்டது.

''பார்ப்பம் ... தம்பி வாலை ஆட்டுகிருர் ... எம்பி வரட்டும் ... ?'' — தனக்குள் கறுவிக்கொண்டான்.

அன்று பூஞ்சோலை இனிதாக நித்திரையிலிருந்து எழுந்தது.

இரவோடு இரவாகச் கடைத்தெரு நீலமும் சிவப்பும் சேர்ந்த வர்ணக் கடுதாசிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. 'மக்கள் மந்திரியே வருக வருக! வாசகங்கள் பொறித்த நீல வர்ணச் சுவரொட்கள்' வெய்யிலின் ஒளியில் பளபளத்தன.
கடைத்தெருவுக்கு வந்த பூஞ்சோலை வாசிகள் முகத்தில் வியப்புடன் நடப்பதை காணத்தயாரகினர்.

ஜீப்பும், வர்ணக் கார்களும் அரண்வகுக்க படகுபோன்ற காரில் மந்திரி பூஞ்சோலைக்கு வந்து சேர்ந்தார்.

அரசகேசரி முகமெல்லாம் பல்லாக நின்று சந்தனப்பொட்டு இட்டு, பன்னீர் தெளித்து முதல் மாலையை அவருடைய கழுத்தில் போட்டான்.

அரசகேசரி ஒழுங்கு செய்திருந்தபடி ஒவ்வொரு குறிச்சியில் இருந்தும் இரண்டு மாலைகள் வீதம் மந்திரிக்கு அணிவிக்கப்பட்டன வெளியே சந்தையின் பின்புறமாகப் பத்துக்கட்டுச் சீனவெடிகளை அரசகேசரியின் தம்பி மகாலிங்கம் தலைமையில் உள் இளவட்டங்கள் கொளுத்தித் தீர்த்தன.

மந்திரியின் முகம் மந்தஹாசமாய் இருந்தது. ''நல்ல ஏற்பாடு வெல்டன் ...''— அரசகேசரியைப் பார்த்துச் சிரித்தபடியே கூறினுர் மந்திரி.

பூஞ்சோலைக் கிராம சபை நூல் நிலைய மண்டபத்தை முன்னரே அரசகேசரி ஒழுங்கு படுத்தியிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டம் நடைபெற்றது.

''பூஞ்சோலைப் பகுதி சரித்திரகாலம் தொட்டுச் சகல அதிகாரிகளாலும் வேணுமென்றே புறக்கணிக்கப்பட்டு விட்டது. இனியும் இந்தக் கதை தொடரக்கூடாது. இந்த நாட்டின் முதுகெலும்பு இளைஞர்களும் யுவதிகளும் தான்! என் மனம் சதா இங்குள்ள ஏழை மக்களுக்காக என்ன செய்யலாம், அவர்களின் வாழ்வை எப்படி வளப்படுத்தலாம் என்று தான் நினைக்கிறது. பெரிய நீர்ப்பாசனத் திட்டமும், சாலைகளை அகலமாக்கி பஸ் போக்குவரத்து வசதிகளை நவீனமாக்கல், உடனடியாக பூஞ்சோலைக்கு மின்வசதி ஏற்படுத்துதல் படித்த சகலருக்கும் உத்தியோகம் வழங்கல் போன்ற பல அருமையான திட்டங்களை நான் என் மனதில் தீட்டியுள்ளேன். அவற்றைச் செயலாக்க நீங்கள் நேசக்கரம் நீட்டவேணும். உங்கள் நலனுக்காகப் பாடுபடும் அரசகேசரியை யாவரும் பின்பற்றுங்கள்'' என்று மந்திரி தனது நீண்டசொற் பொழிவை ஆற்றினார்.

பல்வேறு குறிச்சிகளைச் சேர்ந்தவர்கள் தங்கள் குறைகளை மகஜர் மூலம் மந்திரியிடம் கையளித்தனர். மந்திரி இருகரங்களையும் நீட்டி வெகு பவ்வியமாக அவற்றை வாங்கித் தனது அந்தரங்கச் செயலாளரிடம் கொடுக்க, அவர் அவற்றைப் பின்புறம் நின்ற வேறொரு அதிகாரியிடம் கொடுத்தார். அந்த அதிகாரி அவற்றைத் தன்கையில் வைத்திருந்த பெரிய தோல் பையினுள் அடக்கிக்கொண்டார். பூஞ்சோலையில் பனைவளம் அதிகம் என்பதைக் குறிக்கும் நோக்கமாகப் பனை மரத்தில் நன்ருகச் சீவி வானிஷ் பூசப்பட்ட கைப்பிரம்பு ஒன்றையும் குருத்து ஓலையால் பின்னப்பட்டு வர்ண வேலைப்பாடு நிறைந்த தட்டு ஒன்றையும் யுவதி ஒருத்தி மந்திரிக்கு அன்பளிப்பாக வழங்கினாள்.

தேநீரும் சிற்றுண்டியும் வழங்கப்பட்டன.

''ஏ ஜி ஏ இங்கு வரவில்லையா ... யார் இங்கு ஏ ஜி ஏ ... ?'' — மந்திரி அரசகேசரியிடம் விசாரித்தார்.

''நான் இரண்டு முறை சொல்லியும், அவர் இன்று தனக்கு ஒரு வழக்கு இருக்கிறது என்று சொல்லி போட்டுப் போய் விட்டார் சேர்' அவர் ஆள் சரியில்லை ... மாற்றி விட்டால் நல்லது'' —இரகசியமாக மந்திரியிடம் அரசகேசரி கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் [illegible]
கைவிரல்களினுல் தடவினுர் மந்திரி.

"எப்ப பூஞ்சோலைக்கு மாற்றலாகி வந்தவர்"

"அவர் போன வருஷம் தான் இங்கு வந்தார். அதுவும் எங்கடை எம்பிதான் தனக்குத் தெரிந்தவர் என்று மாற்றம் எடுத்துக் கொடுத்தவர்".

"அப்ப சரி அதை நான் பார்த்துக் கொள்ளுகிறன்.

இது நடந்து மூன்று மாதங்களாகி விட்டன.

டுழங்கேணித் திட்டத்தில் ஆரம்பத்தில் இருந்த வேகம் படிப்படியாகக்குறைய ஆரம்பித்தது. மோட்டர் அடிக்கடி பழுதாகித் தொல்லை கொடுத்தது. சிறுசிறுபிழைகள் வரும் போது திட்டஅங்கத்தவர்கள் தங்கள்பணத்தைக் கூட்டாகப்போட்டு செலவழித்துத் திருத்தினுர்கள். ஆனுல் போகப்போக இதுவே வழக்கமாகி விட்டதை அவர்களால் பொறுக்கமுடியவில்லை. ஒவ்வொரு திட்டத்திலும் மோட்டரை மாற்றிப் புது மோட்டார் இணைத்துத் தரும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது. மேலதிகாரிகளுக்கு எழுதிய விண்ணப்பங்களுக்கு என்ன நடந்தது என்று அறியமுடியாமல் தவித்தனர் அப் பெண்கள் ஆனுல் திட்டமிடல் அதிகாரியை, அரசகேசரி அணுகிமுன்னரே தீர்மானித்தபடி திட்டத்துக்கு ஒரு அலுவலகம் ஒன்றை நிறுவிக் கொண்டான்.

ஏதோ ஒரு உலகநாடு மனமுவர்ந்து வழங்கிய உப உணவுப் பொருள்களான சீனி, கருவாடு மைசூர்ப் பருப்புப் போன்றவை மூடைக் கணக்கில் வந்து சேர்ந்தன சிரமதானம் செய்தால் இவை இலவசமாக வழங்கப்படும் என்று அரசகேசரி அறிவித்தான்.

திட்டக்காணிகளை ஐந்து பிரிவுகளாக பிரித்தனர் ஒவ்வொரு பிரிவிலும் நாலுகாணி துண்டுகள். ஒவ்வொரு பிரிவையும் பத்து அடி அகலமான பாதை பிரித்திருந்தனர். இந்தப் பாதைகளை மந்து வெட்டி. புல்லுச் செருக்கித் துப்புரவாக்குவதிலும், வாய்க்கால் துப்பரவாக்கல் ஆகிய பணிகளிலும் சிரமதானத்தை மேற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்வது எனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. குழுக்குழு வாகப் பெண்கள் தம்மைச் சிரமதானப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டனர். காணியில் குடியிருக்கதா பெண்கள் ஐந்து பேரும் சிரமதானப் பணியில் முழுமையாக ஈடுபட்டனர்.

பொருள்கள் விநியோகம் செய்யும் சமயம் பெரும் குழப்பம் ஏற்பட்டுவிட்டது.

''காணியில் குடியிருக்காத வரை சிரமதானச் சாமான்கள் தரமுடியாது!'' — அரசகேசரி சட்டம் பேசினுன்.

''எந்த விதத்தில் இந்த நியாயம் சேரும்? நாங்கள் குடியிருக் காததது உண்மைதான். அது வேறை விஷயம் ..'' இப்ப நாங்கள் சிரமதானம் செய்ததற்குப் பொருள்களை தாருங் கோவன்...'' ஒரு பெண் நியாயம் கோரினுள்.

''வீண்கதை கதைக்கவேண்டும். இல்லையெண்டால் இல்லைத்தான் போய்ச் செய்கிறதைச் செய்யுங்கோ

ஐந்து பெண்களும் எவ்வளவோ வாதாடினுர்கள் ஆனுல் அரசகேசரி மசியவில்லை. நடப்பதை எல்லாம் பூமணி மௌன மாகப் பார்த்துக் கொண்டு நின்றுள்.

''கனகலட்சுமி ...'' — அரசகேசரி அழைக்க கனகலட்சுமி முன்னுக்கு வந்தாள்.

''இந்தாரும் ஸ்ரோர் திறப்பு. லிஸ்ட் எழுதி வைச்சிருக்கிறன் அந்தந்தப் பெயர்களைக் கூப்பிட்டுப் பொருள்களைக் கொடும் ... நான் சொன்ன மாதிரிச் செய்யும், என்ன...? நீங்கள் ஒவ்வொரு வாராய்ப் போய்க் கனகலட்சுமியிடம் பொருட்களை வேண்டுங்கோ...'

கனகலட்சுமியிடப் பொருள்கள் விநியோகம் செய்யும் பொறுப்பை அரசகேசரி கொடுத்தது. பலருக்கு அதிருப்தியைக் கொடுத்தது ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''ஏன், நீங்கள் நிண்டு விநியோகிக்கலாம் தானே ?கனக லட்சுமி கொடுக்கத் தேவையில்லையே?'' — பூமணி அரசகேசரியைப் பார்த்துக் கூறினுள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் நீண்டு கொடுக்க வேணுமெண்டு சட்டம் இல்லை. விளங்குதே ? கனகலட்சுமி கொடுத்தால் என்ன ?''

''ஏன் கனகலட்சுமியைப் பொறுப்பாக இருக்க விடுகிறீர்கள்? பூமணிதானே திட்டத்தலைவி? பூமணி இந்த வேலையைச் செய்யலாம் தானே ?'' — கமலா கூறினுள்.

''வாயை மூடுங்கோ. பூமணி தலைவி எண்டால் எனக்கென்ன ? கண்டறியாத தலைவி! விருப்பமானவர்கள் போய் வேண்டுங்கோ விருப்பமில்லாவிடின் எனக்கொன்றுமில்லை.''
அரசகேசரி புறப்பட்டுச் சென்று விட்டான்.

திட்டத்துக்குப் பக்கத்தில் வியாபார நிலையங்களுக்கு என்று அரசு காணிகள் ஒதுக்கி விட்டிருந்தது. கதிராசி என்பவன், தோட்டக் காட்டுப் பகுதியிலிருந்து முழங்கேணிக்கு வந்து சேர்ந்தான். முன்னரே பூஞ்சோலையைச் சேர்ந்த ஒருவர் ஒரு காணித்துண்டை அனுமதிப்பத்திரம் மூலம் பெற்று ஒரு சிறிய கடை கட்டி வியாபாரம் செய்து வந்தார். வியாபாரம் நட்டத்தில் ஓடவே கடையை இழுத்து மூடி விட்டுப் பூஞ்சோலைக்குத் திரும்பி வந்து விட்டார். கதிராசி அவரைக் கெஞ்சிக் கூத்தாடி அந்தக்கடையை நடாத்த அனுமதி பெற்று நாடத்தத் தொடங்கினுன் வியாபாரம் நல்ல செழிப்பாக நடந்தது ஆள் நல்ல வாட்ட சாட்டமாக இருப்பான் நல்ல சிவப்பு நிறம். சிரிக்கச் சிரிக்கப் பேசுவான்.

கனலட்சுமி வழக்கமாக அந்தக் கடையில் தான் பொருள்களை வாங்குவது வழக்கம். கனகலட்சுமிக்கு வெகுதாராளமாகக்கடன் கொடுக்க ஆரம்பித்தான் கதிராசி. நாளடைவில் கனகலட்சுமி கடையே கதி என்று மணித்தியாலக் கணக்கில் அவனேடு பேசிக்கொண்டு நிற்கும் வழக்கத்தை மேற்கெண்டாள்.

திட்டம் முழுவதும் இது தான் சுவையான கதையாக இருந்தது. எல்லோரும் ஏதோ ஒன்றை எதிர்பார்த்தனர். கடைசியில் அது நடந்தே விட்டது. முழங்கேணிப் பிள்ளையார் கோயிலில் கதிராசி கனகலட்சுமியைக் கல்யாணம் செய்து கொண்டான். இப்பொழுது கனகலட்சுமி தனது காணியில் உள்ள கொட்டிலை விட்டு வெளியேறிக் கதிராசியின் கடையின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்புறத்தில் அமைந்திருந்த அறையில் குடியேறி விட்டாள் கடையில் கதிராசிக்குப்பதில் கனகலட்சுமியே மேசையில் இருந்து வியாபாரத்தைக் கவனித்தாள். "பாப்பா வந்தாப் பிறகு கடைவியாபாரம் பரவாயில்லீங்க ..." — கதிராசி பெருமையாகச் சொல்லிக் கொள்ளுவான்.

# [6]

கனகலட்சுமி கதிராசியைக் கல்யாணம் செய்து கொண்டது திட்டத்தில் உள்ள பெண்களுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்து விட்டது. அதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டார்கள். அவளோடு பேச்சு வார்த்தையைக் குறைத்துக் கொண்டனர் சில பெண்கள். பூமணி அதில் முதன்மையாய் நின்றாள்

சிரமதானம் நடந்து முடிந்ததும் பொருள்கள் சீராக விநியோகம் செய்யப் படாததும் பெரும் புயலை தோற்று வித்தது. பூமணி மிகப் பெரிய முறைப்பாடு ஒன்றை எழுதி அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தாள். அங்கிருந்து இந்த விடயத்தை நன்கு விசாரித்து உடன் அறிக்கை அனுப்பச் சொல்லிப் பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

உதவி அரசாங்க அதிபர் ஒரு நாள் திடீரென்று முழங் கேணிக்குப் புறப்பட்டுச் சென்று பூமணியைச் சந்தித்தார். பூமணி நடந்த விஷயங்களையும் நடக்கின்ற விஷயங்களையும் சாங்கோபாங்கமாக எடுத்துக் கூறினாள். பக்கத்துக் காணிக்காறி கமலாவும் வேறு சிலரும் வாக்கு மூலம் அளித்தனர். பெண்களில் சிலர் முதலில் கனகலட்சுமியிடம் சென்று சிரமதானப் பொருள் களைப் பெற விருப்பமில்லாமல் இருந்து ஒரு வாரத்துக்குப் பின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்று அவள் கொடுத்த பொருட்களைப் பெற்றுக் கொண்டு பதிவேட்டில் கையொப்பம் வைத்திருந்தனர். பொருட்கள் வழங்கிய பதிவேட்டைப் பார்க்க ஏஜிஏ விரும்பியும் அரசகேசரி இல்லாதபடியால் அதைப்பார்க்க முடியவில்லை.

"நீர்தானே திட்டத்தலைவி ... உம்மிடம் திறப்புத் தருவதில்லையா?- ஏஜிஏ பூமணியிடம் கேட்டார்.

அவர் இப்ப என்னோடை கதைப்பதில்லை கனகலட்சுமியிடம் தான் எல்லாப் பொறுப்பையும் கொடுத்திருக்கிறார்.

ஏஜிஏ கனகலட்சுமியை ஆள்விட்டுக் கூப்பிடுவித்தார்.

"கூப்பிட்டீங்களா சேர்?" முகமெல்லாம் சிரிப்பாக ஏஜிஏக்கு முன் வந்து நின்றாள் கனகலட்சுமி.

"ஸ்ரோர் திறப்பு உம்மிடம் தானே?"

"திறப்பு என்னட்டை இல்லை சேர்... அரசகேசரி ஐயா தான் வைச்சிருக்கிறார்."

உதவி அரசாங்க அதிபர், மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டு நின்றார்.

சிரமதானப்பொருள்கள் வழங்கப்பட்ட பதிவேட்டை உதவி அரசாங்க அதிபரின் உத்தரவின் பெயரில் அரசகேசரி அலுவலகத்திற்குக் கொண்டு வந்திருந்தான். ஒவ்வொருவருடைய பெயருக்கு நேரிலும் சீனி, மைசூர்ப் பருப்பு வழங்கப்பட்ட மாதிரி பதியப்பட்டு ஒவ்வொருவரது கை எழுத்தும் பதியப் பட்டிருந்தன.

"என்ன டீ ஓ அங்கை எல்லாரும் சிரமதானப் பொருள்கள் தாங்கள் எடுக்கவில்லை என்று வாக்கு மூலம் தந்திருக்கினம்... இஞ்சை றெஜிஸ்தரிலை கைஎழுத்து வைச்சிருக்கு! எனக்கு ஒன்றும் விளங்கவில்லை...! சந்தேகக் கண்ணோடு அரசகேசரியை எதிர்நோக்கினார் ஏஜிஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதிலேதான் விஷயம் இருக்கு. பெட்டையள் பொருள்கள் எல்லாம் எடுத்துப்போட்டுக் கடைசியிலே இப்படி வம்புத்தனம் செய்யினம். எல்லாம் இந்த பூமணி என்ற பெட்டை தான் குழப்பங்களுக்குக் கராணம்... கனகலட்சுமி எண்டு ஒரு அங்கத்தவர்... அவள் ஒரு நல்ல ஒழுங்கானவள். அவள் பொருள்கள் விநியோகத்தைப் பொறுப் பெடுத்தது மற்றவைக்கு பிடிக்கவில்லை''

''ஆனுல் வழக்கமாகப் பூமணி தானே இவ்வளவு காலமும், இப்படியான வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தவள். அவை தங்களுக்குத்தோதான ஆளைத்தானே தலைவியாய்த் தெரிவு செய்தவை. நீர் ஏன் அதிலே ஒரு மாற்றத்தைச் செய்தனீர்?''

உங்களுக்கு அங்கை நடக்கிற விஷயம் ஒண்டும் தெரியாது... எல்லாரும் சண்டைக்காறியள் அலுவல் உருப்படியாகச் செய்ய முடியாது."

''அப்படி ஒன்றும் செய்ய முடியாது. உம்மாலே நடத்த முடியாது என்று நினைத்தால் நீர் எனக்கு முன்னரே அறிவிச்சிருக்கலாம் தானே... இவ்வளவு காலமும் குழப்பங்களை எனக்குச் சொல்லாமல் விட்டது உம்முடைய பிழை.''

''இப்ப நீங்கள் சொல்லுறதைப் பார்த்தால் ஏதோ நான் தான் எல்லாத்துக்கும் காரணம் எண்டு சொல்லுற மாதிரி எல்லோ கிடக்கு..." — அரசகேசரியின் வார்த்தைகளில் சூடு ஏறியது.

''அதுசரி நாலாம் ஐஞ்சாம் காணியளுக்குத் தண்ணீர் கொண்டு போகப்பூட்டிய எஸ்லோன் பைப் துண்டுகள் ஒன்றும் அங்கை இல்லை... அவை எங்கை வைச்சிருக்கிறீர்?"

''அது கழட்டி அங்கை தான் வைச்சிருக்கு"

''எங்கை வைச்சிருக்கிறீர்?"

''ஸ்ரோரிலே தான் கிடக்கு."

''ஸ்ரோரிலே இல்லையாமே...

கனகலட்சுமியின் கடையிலே கொண்டு போய்ப் போட்டிருக்காம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓ... அது .. இரண்டு பைப் கொஞ்சம் நீளம் கூடியது. அந்த இரண்டு தான் அங்கை கிடக்கு. ஸ்ரோறிலை வைக்க முடியாது. கனகலட்சுமியின் கடையிலை கிடந்தால் என்ன? நான் தானே பொறுப்பு.

"டிஓ, அரசாங்கச் சொத்துக்களைத் தனியார் பாதுகாப்பிலை கொண்டு போய் வைப்பது ஒழுங்கில்லை. நீர் பொறுப்பு என்ற விஷயம் எனக்கு மட்டுமல்ல, எல்லாருக்கும் தெரியும். ஆனால் நீர் செய்தது பிழை. நாளைக்கு அந்தச் சமான்கள் களவு போனால் யார்பொறுப்பு? இப்ப ஏன் களவுபோற கதையைப்பற்றி கதைப்பான் அது நான் பொறுப்பு ஏற்றனான் கவனிப்பன் தானே?

"டிஓ நீர் இப்படி ஏறுக்கு மாறாக மறுமொழி சொல்ல வேண்டாம். நான் இப்ப என்னுடைய அறிக்கையையும் இந்தப் பதிவுப் புத்தகத்தையும் அரசாங்க அதிபருக்கு அனுப்புகிறேன். நீர் அங்கை போய்க் கதையும் சரி, நீர் போகலாம்."

உதவி அரசாங்க அதிபர் கோபத்துடன் கூறினார்.

"நீங்கள் தாராளமாய் அனுப்புங்கோ... அது நான் மறுமொழி சொல்லுவன்."

அரசகேசரி இறுமாப்புடன் சொல்லிவிட்டு எழுந்து போய் விட்டான்.

அரசகேசரியின் பேச்சு வார்த்தைகள் பதிவுப் புத்தகம் பேணப்பட்ட முறை யாவும் உதவி அரசாங்க அதிபருக்கு மனத்தில் பெரும் சந்தேகத்தை ஏற்படுத்தி விட்டது. வழக்க மாகவே அரசகேசரி தன்னை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை என்ற ஆத்திரம் கொஞ்ச நாட்களாய் அவருடைய மனதில் வேரூன்றி இருந்தது பெண்கள் திட்டத்தில் தான் சேகரித்த விபரங்கள், வாக்கு மூலங்கள், பதிவுப் புத்தகம் யாவற்றையும் அரசாங்க அதிபருக்குத் தானே நேரில் கொண்டு போய்க் கொடுத்து அரசகேசரியை உடன் இடமாற்றம் செய்யும் படி கூறிவிட்டு வந்து விட்டார் ஏஜிஏ.

அரசகேசரி இதைப்பெரிதும் எதிர்பார்த்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவி அரசாங்க அதிபர் தன்னை அழைத்துத் திட்டவேலைகள் பற்றிக் கேட்ட அன்றிரவே கொழும்புக்கு ரெயில் ஏறி விட்டான் அவன். இரண்டு நாட்கள் நின்று மந்திரியைச் சந்தித்து, பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபரை உடன் இடமாற்றம் செய்ய வேண்டும் என இருநூறு பேர் கையொப்பம் இட்ட மகஜர் ஒன்றை அவரிடம் கையளித்தான்.

"நீங்கள் செய்ய வேண்டிய சகல வேலைகளுக்கும் முட்டுக் கட்டையாய் நிற்பார்!"

–இது தான் அரசகேசரி உதவி அரசாங்க அதிபரைப் பற்றிக் கூறிய குற்றச்சாட்டு. தன் மீது வீண் பழி சுமத்தித் தன்னை இடமாற்றம் செய்ய அவர் அரசாங்க அதிபருக்குச் சிபார்சு செய்த கதையையும் வெகு உருக்கமாக எடுத்து மந்திரியிடம் கூறினன்.

''நீர் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். என்னை மீறி ஒருஅலுவலும் நடக்க நான் விடமாட்டேன். உம்மை அங்கையிருந்து மாற்ற நான் விடமாட்டேன். வேணுமென்றால் ஏஜிஏ மாற்றத் திலை போகட்டும்."

''அவர் எம்பியின்ரை ஆள் சேர்."

''அரசகேசரி உந்தக் கதையை எனக்குச் சொல்ல வேண்டாம் அந்தத் தொகுதிக்கு நான் தான் அமைப்பாளன் எண்டு உமக்குத் தெரியுந்தானே. நீர் கவலையில்லாமல் போய் நடக்க வேண்டிய அலுவல்களைப் பாரும். மிச்சம் நான் பார்த்துக் கொள்ளுவன்.''

அரசகேசரி கவலை இல்லாமல் பூஞ்சோலைக்கு வந்து சேர்ந்து விட்டான். உதவி அரசாங்க அதிபர் அனுப்பிய அறிக்கை கிணற்றுக்குள் போட்ட கல் மாதிரி ஒன்றுமே நடக்கவில்லை!

மாருக பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபருக்கு உடனடியாக இடமாற்ற அறிவித்தல் 'ரேடியோ மெசேச்' மூலம் கொழும்பிலிருந்து வந்தது!

எம்பி கோபத்தில் கத்திக் கொண்டு நின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''பாம்புக்குப்பால் ஊத்தின மாதிரி இவனை ஆளாக்கி விட்டனே எல்லாம் உன்னுலே வந்த வினே!'' பரமலிங்கத்தைப் பார்த்துக் கத்தினுர், எம்பி.

''எனக்குத் தெரியாமல் தான் இவ்வளவு நாளும் இந்த வேலேயள் நடந்திருக்கு சேர்'' — பரமலிங்கம் மெதுவாகக் கூறிஞ .

''அப்ப நீ இவ்வளவு காலமும் பூஞ்சோலேயிலே நித்திரை கொண்டனியே? விசர்க் கதை கதைக்கிறுய் ..''

''நான் உண்மையைத்தான் சொல்லுறன் சேர். அவன் மந்திரிக்குக் கூட்டம் ஒழுங்கு செய்தது, பெடியள். பெட்டையளே அங்கத்தவராக்கினது எல்லாம் சரியான முறையிலே ரகசியமான நடவடிக்கை யாய்த்தான் செய்தவன்!''

''அவன் கெட்டிக்காரன். — அவனுக்கு மூளே இருக்கு. உங்களுக்கு... எட இவனேக் கொண்டு போய் மந்திரிக்கு அறிமுகம் செய்து வைச்சனே .. இப்ப எல்லோருக்கும் தலேயிலே மிளகாய் அரைக்க போறுனே...!''

பரமலிங்கம் மௌனமாக கேட்டுக் கொண்டிருந்தான்.

''சரி நீ போய் வாற சனிக்கிழமை பூஞ்சோலேயிலே ஒரு கூட்டத்தை ஒழுங்கு செய்! எல்லா ஆட்களுக்கும் சொல்லிவை. நான் வந்து எல்லாம் கவனிக்கிறன்''

பரமலிங்கம் இவ்வளவு காலமும் தனக்குப் பின்னுல் திரிந்த இளேஞர்களே அவசரமாகச் சந்தித்தான். ஒவ்வொரு குறிச்சியிலும் எம்பியினுடைய ஆதரவாளர்கள் என்று சொல்லிக் கொண்டு இருந்த சில வயது வந்தவர்களே எல்லாம் சந்தித்தான். சனிக்கிழமை காலே கூட்டத்துக்குச் சகல ஒழுங்குகளும் செய்திருந்தான்.

காலேயில் எம்பி ஜீப்பில் தனது காரியதரிசியுடன் வந்து சேர்ந்தார்.

கூட்டம் நடக்க ஏற்பாடு செய்திருந்த இடம் வெறிச்சோடிக் கிடந்தது. பரமலிங்கம் முகமெல்லாம் வெளிறிப்போய் நின்றுன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமணியின் சகோதரன் 'முரட்டு மணியம்' நல்ல குடி போதையில் வாசற்படியில் அமர்ந்திருந்தான்.

எம்பி ஜீப்பிலிருந்து இறங்கி வந்தார்.

"என்ன பரமலிங்கம், கூட்டம் என்ன மாதிரி... ஒரு ஆட்களையும் காணவில்லை..."

''அதுதான் சேர் எனக்கும் விளங்கவில்லை... எல்லா ஆட்களிடமும் சொல்லி வைச்சனுன்...''– அவன் வார்த்தைகளை இழுத்தான்.

''உனக்கு எப்ப எல்லாம் விளங்கப் போகுது எண்டு கடவுளுக்குத்தான் தெரியும். நீ சரியாய் இருந்தால் இவ்வளவு அலங்கோலம் வந்திருக்காது.''

எம். பி. இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும் போது முரட்டு மணியம் எழும்பிக்கிட்ட வந்தான்.

''தம்பி வாருங்கோ... இஞ்சை ஆர் பெரியவன்? கண்டவன் நிண்டவன் எல்லாம் பெரிய ஆட்கள் அங்கை திட்டத்தை அவன் அரசகேசரி இழுத்து மூடப்போறுன். நீங்கள் இஞ்சை நித்திரை கொள்ளுங்கோ...!''

அவனின் நடை தள்ளாடியது

மணியம் அங்காலை போ... !" — பரமலிங்கம் மணியத்தின் நெஞ்சில் கையை வைத்துத்தள்ள முயற்சித்தான்.

''எடடா கையை... நீ இஞ்சை என்னட்டைச் சண்டித்தனம் காட்டாதை... ஏலுமெண்டால் அவன் அரசகேசரிட்டை போய் சண்டித்தனத்தைக்காட்டு!''

''பரமலிங்கம் சும்மா இரு... அவன் வெளியிலை நிற்கிறுன் நீ கொளுவி மரியாதை கெடாதை...!"

—எம். பி. பரமலிங்கத்துக்கு கேட்கக் கூடியதாய்ச் சொல்லி விட்டு ஜீப்பில் ஏறிவிட்டார். காரியதரிசியும் மௌனமாய்ப் போய் ஏறிக்கொள்ள ஜீப் புறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''போங்கோ... இஞ்சை வராதேங்கோ...! இஞ்சை பெரியவன் அரசகேசரி தான்...!''

முரட்டு மணியம் போதையின் உச்சியில் நின்று கத்திக் கொண்டிருந்தான்.

பரமலிங்கம் வெட்கத்தினுல் முகம் சிவக்க, தன்னுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு போய் விட்டான்.

பூஞ்சோலைக் கடைத்தெருவுக்கு பொருள்கள் வாங்க வந்தவர்கள் எல்லோரும் இந்தக் காட்சிகளைக் கண்டு தம்முள் கதைத்துக் கொண்டிருந்தனர்.

வேப்பமரத்தின் கீழ் அமைந்திருந்த 'தேவிவிலாஸ்' தேநீர்க் கடையினுள் மறைந்திருந்து நடப்பன வற்றையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த அரசகேசரி ஒரு புன் சிரிப்புடன் வெளியே வந்து கடையின் ஓரத்தில் நிறுத்தியிருந்த தனது மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்றுன் அதையும் கடைத் தெருச் சனங்கள் கண்டனர்.

# [7]

இந்தச் சம்பவங்கள் நடந்த ஆறுமாதங்களுக்கு மேல் சென்று விட்டன. பூஞ்சோலை பூஞ்சோலையாகவே இருந்தது.

அரசகேசரி ஒவ்வொருவார இறுதியிலும் கொழும்புக்குச் சென்று வந்தான். அவன் இப்பொழுது பெரிய 'பிசி' யாகத் திரிந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் இடமாற்றம் செய்யப் பட்டு வேறு ஒருவர் புதிதாக வந்து பதவியேற்று விட்டார். அவர் பல்கலைகழகத்தில் அரசகேசரியோடு கூடப்படித்தவர் அவனுக்குத் தூரத்து உறவு கூட! அது அவனுக்கு மிகவும் வசதியாக அமைந்தது. புதியவரின் பெயரை மந்திரியிடம் அரச கேசரியே சிபார்சு செய்து— 'அவரை இங்கு எடுப்பித்தால் எங்களுக்கு நல்லது'- எனச் செய்த ஏற்பாடு அது.

இப்பொழுதெல்லாம் அரசகேசரி முழங்கேணித் திட்டத்துக்கு இரண்டு வாரத்திற்கு ஒருமுறை தான் போவான். திட்டத்துக்குச் செல்லும் போதெல்லாம், பகல் சாப்பாடு கனகலட்சுமி கடையில் தான், அவன் சாப்பிடும் போது கடையை இழுத்து மூடிவிட்டு. கதிராசி கோயில் வாசலில் போய் அமர்ந்து விடுவான்.

''என்ன கதிராசி கடை பூட்டியிருக்கு?''- யாரும் கேட்பார்கள்.

''தலைவர் சாப்பிறுரு, குழப்பக்கூடாதுங்க''- இப்படிப் பதில் கூறுவான் கதிராசி. நடக்கும் விஷயங்களைப் பார்த்துச் சிரித்தது முழங்கேணி.

''பூமணியின் மனம் பெரிதும் கலக்கமடைந்தது அவள் படித்து விட்டு உத்தியோகம் பார்க்கவே விரும்பினுள். ஆனல் ஆரம்பத்தில் அரசகேசரியின் தூண்டுதலால் தானே உத்தியோக எண்ணத்தைக் கைவிட்டாள்!

அவள் விவசாயத்தையும் ஒருபாடமாக எடுத்துச்சித் தியடைந்த படியால் தான் முழங்கேணித் திட்டத்தில் குடியேறச் சம்மதித்தாள். திட்டத்தில் தனக்களித்த காணித்துண்டை மிகப்பரந்த அளவில் அபிவிருத்தி செய்யவேண்டும்; தான் ஒரு மாதிரி விவசாயியாகத் திகழ வேண்டும் எனக்கனவுகள் பல கண்டாள். ஆனுல் அவளின் கனவுகள் யாவும்; ஒவ்வொன்ருகச் சிதையத் தொடங்கியதை அவளால் தாங்கமுடியவில்லை.

பூஞ்சோலை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு எத்தனையோ தடவைகள் சென்ருள். முறைப்பாட்டுக்கு மேல் முறைப்பாடாய் எழுதிக்குவித்தாள். ஆனுல் அவை ஒன்றும் எடுபடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஏ. ஜீ. ஏ. அரசகேசரியின்ரை ஆள்! அவர் நீ என்ன தான் எழுதிக் கொடுத்தாலும் கவனிக்கமாட்டார்!''—இப்படி அவளுக்குப் பலர் கூறினர்கள்.

ஆனால் அவள் சலிப்படையவில்லை. அலுவலகத்திற்கு இரண்டு வாரத்திற்கு ஒரு முறை போகத்தான் செய்தாள்.

ஏ. ஜி. ஏ. தன் மூக்குக் கண்ணாடிக்குள்ளால் இவளைப் பார்த்தார். தான் மனதில் நினைத்திருந்த எல்லாவற்றையும் மூச்சு விடாமல் சொல்லி முடித்தாள். அரசகேசரியின் 'தர்பார்' கதைகளைக் கூறும் பொழுது அவள் விம்மி வெடித்தாள். ஆனால் ஏ. ஜி. ஏ அசையவில்லை.

''இஞ்சை பார் சும்மா அழுது மனுசனுக்குத் தலையிடியை உண்டாக்காதை, உங்களுக்குள் ஒற்றுமை இல்லை... சின்ன விஷயங்களுக்கும் சண்டை பிடிக்கிறியளாம். இப்ப நீ சொன்ன விஷயத்தை நான் கவனிக்கிறன். இனி அடிக்கடி இஞ்சை வர வேண்டாம். சும்மா நினைச்ச பாட்டுக்கு முறைப்பாடு எழுதிக் கடுதாசியை வீணாக்காதே, ஒருக்கா எழுதின எனக்கு விளங்கும் தானே.

''சரி நீ போகலாம்'' — முகத்தில் எவ்விதச் சலனமுமில்லாமல் அவர் கூறிவிட்டார்.

''அநியாயம் பிடிச்சவங்கள்...'' – தனக்குள் திட்டிக் கொண்டே அலுவலகத்தை விட்டு வெளியேறினள் பூமணி.

மந்திரி தான் அளித்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றத்தான் செய்தார் அரசகேசரி கொடுத்த லிஸ்டின்படி படித்த இளைஞர்கள், யுவதிகள் சகலருக்கும் அவரவர் தகுதிக்கேற்றமாதிரி உத்தியோகம் கிடைத்தது. தபால் இலாகாவில் மட்டும் முப்பது இளைஞர்களுக்கு வேலைகிடைத்ததும், பூஞ்சோலை மக்கள் வியந்தனர். சகலரது சிந்தனையும் அரசகேசரியின் பால் திரும்பியது! அவனை மதியாதவர்கள் கூட இப்பொழுது புதுக் கௌரவம் கொடுக்கத் தலைப்பட்டனர். வீதியில் அவனைக்கண்டால் போதும். ''தம்பிவாருங்கோ'' என உள்ளத்தில் இருந்ததோ இல்லையோ அன்பொழுக அழைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகேசரி புன்முறுவலுடன் தலையாட்டிவிட்டுச் சென்று விடுவான். அவனுக்குத் தேவையான தெல்லாம், மற்றவர்கள் தன்னை முழுமையாகக் கௌரவிக்க வேண்டும். பூஞ்சோலைப் பகுதியில் தான் ஒரு முதன்மையானவனாய்த் திகழ வேண்டும் என்பதே ஆகும்!

சகல குறிச்சிகளிலும் அவனின் அந்தஸ்து அதிகரித்தது. அங்கெல்லாம் அவனது தயவால் அரசாங்க வேலை பெற்றவர்களின் தாய்தந்தையர் அவனைத்தம் இஷ்ட தெய்வமாகப் போற்றத் தொடங்கினர்.

மந்திரி, தான் பூஞ்சோலைக்கு வரும் நிகழ்ச்சி இருந்தால் ஒரு வாரத்துக்கு முன்னரே அரசகேசரிக்குத்தன் செயலாளர் மூலம் அறிவித்துத்துவிடுவார்.

இப்பொழுது தெல்லாம் அரசகேசரி தான் ஓடித்திரிவதில்லை, இருந்த இடத்தில் வைத்துக்கட்டளை பிறப்பித்தால் அவன் நினைத்ததிலும் பார்க்கக்கனகச்சிதமாக ஒழுங்குகளைச் செய்து முடித்து விடுவார்கள்.

அதில் அவனுக்குப் பெரிய பெருமை!

பூஞ்சோலைப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் ஏதோ ஒரு பெரிய மோசடி நடந்து விட்டது! அங்கு பணி புரியும் ஊழியர் இருவர் அரசகேசரியின் ஆட்கள். அவர்கள் அவனிடம் வந்து உள்ரகசியங்களை அவிழ்த்து விட்டார்கள். அரசகேசரியும் இப்படி ஒரு நல்ல சந்தர்ப்பத்துக்காகத் தானே காத்திருந்தான். அவன் துரித கதியில் செயல்பட்டான் கணக்குப் பரிசோதனை நடந்தது. பின்னர் கொழும்பிலிருந்து வந்த அதிகாரிகள் குழு விசாரணையை மேற்கொண்டது. பலன், பரமலிங்கத்தை தலைவராகக் கொண்ட நெறியாளர் சபை உடனடியாகக் கலைக்கப்பட்டது. பரமலிங்கம் பதறினான். தன் கௌரவம் அந்தஸ்து எல்லாம் குலைந்து விட்டன எனதன்னுள்ளே அழுது புலம்பியவன்; எம்.பியிடம் ஓடினான். எம்.பியும் அது தனக்குகிடைத்த அவமான எனக்கருதி எல்லா இடமும் தொடர்பு கொண்டார். ஒரு பலனும் கிட்டவில்லை! ஒரு வாரத்துக்குப் பின்னர், அரசகேசரியைத் தலைவராகக் கொண்ட மூன்று அதிகாரிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்க நிர்வாகப் பொறுப்புக்கு நியமிக்கப்பட்டனர்

அரசகேசரியைத் தம்பி என்று அழைத்தவர்கள் இப்பொழுது தலைவர் என அழைக்க ஆரம்பித்து விட்டனர். சங்கத்துக்குப் புத்துயிர் கொடுக்க வேண்டுமெனச் சொல்லிக் கொண்ட அரசகேசரி பல நடவடிக்கைகளை ஒவ்வொன்ருக எடுக்கத் தொடங்கிஞன், ஒவ்வொரு குறிச்சியிலுமுள்ள கிளை முகாமையாளரையும் கடும் பரிசோதனைக்குள்ளாக்கிஞன். தன்னை முன்பு மதியாதவர்களை. அலட்சியம் செய்தவர்களையெல்லாம் பழிக்குப் பழி வாங்கவேணும் என்ற குரோத உணர்வை வளர்த்துக் கொண்டான்.

முழங்கேணித் திட்டத்துக்கு அண்மையில் சங்கத்திற்கு ஒரு கிளை அமைந்தது. திட்டத்தின் அங்கத்தவர்களுள் ஒருவரான கமலாவின் தமையன் இந்திரராசா என்பவன் கிளை முகாமையாளராய் இருந்தான். எம்பியின் முழு நம்பிக்கைக்குப் பாத்திரமானவன். இயற்கையிலேயே இரண்டு கால்களும் முடமாகிப் பிறந்தவன் அவன். வெற்றிலை வாயும் சிரிப்புமாகச் சகலருடனும் நட்பாகப் பழகுவான். அவனது குடும்ப நிலை காரணமாகவும் ஓடியாடி வேலைசெய்யமுடியாது என்ற காரணத்திற்காகவுமே எம்பி தனது முழுச் சிபார்சுடன் சங்கத்தில் அவனை வேலைக்குச் சேர்ப்பித்தார்.

பெண்கள் திட்டத்தில் அரசகேசரியின் அக்கிரமங்கள் பொறுக்க முடியாமல், கமலா தன்னுடைய வீட்டில் சென்று முறையிட்டிருந்தாள். பொறுமையின் எல்லையை மீறிய இந்திரராசா ஒருநாள் பூஞ்சோலைக் கடைத்தெருவில் பலருக்கு முன்னிலையில் அரசகேசரியை வாயில் வந்தபடி பேசிவிட்டான். பேசியது மட்டுமல்லாமல் மண் அள்ளித் திட்டியும் விட்டான். அச்சம்பவம் அரசகேசரியின் மனதில் ஆழமாகப் பதிந்திருந்தது.

சமயம் இலகுவில் வந்தடைந்தது. அரசகேசரிக்கு பரிசோதனையின் பின் இந்திரராசாவை வேலையில் இருந்தும் இடைநிறுத்தம் செய்து விட்டான். அவனின் நிலை பரிதாபகரமாய் இருக்கிறது என்றும் மீண்டும் வேலைகொடுக்க வேண்டும் என்றும் கோரி அரசகேசரியிடம் தூது சென்ருர்கள். ''கடைசிவரை முடியாது! நான் சங்கத்திலை இருக்கு மட்டும் இந்திரராசா சங்கப்படி மிதிக்க விடமாட்டன்!'' என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டான் அரசகேசரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு முன்னர் திட்டமிட்டிருந்தபடி பெண்கள் திட்டத்தில் இரண்டாவது குழாய்க் கிணறு தோண்டுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. திட்டத்தில் உள்ள பின்புறக்காணிக்காரர்கள், இனித்தங்கள் தண்ணீர்ப் பிரச்சனை தீர்ந்து விடும் என்ற நம்பிக்கையில் மனமகிழ்ந்தனர். கிணறு தோண்டும் இடம் பாறைகள் நிறைந்த இடமாக இருந்தபடியால் கிணறு தோண்டும் பணி பல நாட்கள் நீடித்தன கடைசியில் கிணறு தோண்டி முடிந்தது. மோட்டார் இணைத்து அதற்குத் சிறு கட்டிடமும் கட்டவேண்டியிருந்தது. மழைக்காலமென்றபடியால் அது முடிந்ததும் கட்டுமான வேலைகளை ஆரம்பிக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால் கிணற்று வேலை முடிவடைந்த இரண்டு வாரங்களுக்குப் பின் குழாய்க் கிணற்றினுள் கல்லுகளை நிறையப் போட்டுப் பழுதாக்கி விட்டனர். பூமணி தான் இதை கண்டு பிடித்தாள். உடனடியாக அரசகேசரிக்கு இதுபற்றி அறிவித்தாள் அரசகேசரியும் நீர் வழங்கல் சபை அதிகாரிகளும் உடன் விரைந்து வந்து பார்வையிட்டனர். எவ்வளவோ கஷ்டப்பட்டு முடித்த பணியை இப்படிப்பாழ்படுத்தி விட்டனரே என்று தனது மனவருத்தத்தைத் தெரிவித்த பொறியியலாளர் மௌனமாக அங்கிருந்து சென்று விட்டார். கடைசிவரையிலும் அந்த சமூகத் துரோகமான வேலையைச் செய்தவர் யார் என்று கண்டுபிடிக்கவே முடியவில்லை. பூமணி இதற்கும் உதவி அரசாங்க அதிபரை உடன் வந்து இதைப் பார்வையிடுமாறு ஒரு முறைப்பாட்டை எழுதிப் போட்டாள்.

முறையான வாய்க்கால் வசதி அமைத்தால் முதலாம் கிணற்றிலிருந்து நீரை மற்றைய காணிகளுக்கும் கொண்டு போகலாம் என்று முன்னரே வரைபடங்களுடன் திட்டம் ஒன்று தயாராகியிருந்தது. அதையாவது செய்துதர முடியாதா என்ற கோரிக்கையை எழுதிப்பூமணியும் வேறு சில பெண்களுமாய் அரசாங்க அதிபரிடம் நேரில் சென்று கையளித்தனர். அரசாங்க அதிபருக்கு முழங்கேணிப் பெண்கள் திட்டம் தொடங்கிய விதமும் அது சீரழிந்தவிதமும் நன்கு தெரியும். அரசகேசரிக்குத் தற்போது உள்ள அரசியல் செல்வாக்கினால், அவனை அவரால் ஒன்றும் செய்ய முடியாமலிருந்தது ஆகவே, பெண்கள் கேட்ட கோரிக்கையாவது செய்து கொடுக்க வேண்டும் என்ற உண்மையான அக்கறையில் அவர் செயலாற்றினர். சிமெந்திலான வாய்க்கால் அமைக்கும் பணிக்கு அவரது முயற்சியால் வெகு விரைவில் அனுமதி கிடைத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூஞ்சோலைப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம் இந்தவேலையைக் கொந்தராத்து முறையில் செய்து முடிக்கும் எனக்கூறி அவ்வேலையைச் சங்கம் ஏற்றுக் கொண்டது.

சங்கம் என்பது அரசகேசரியே.

''சங்கத்தின் பேரிலை எடுத்து தாங்க தலைவர் நான் பிரமாதமாய் செய்து முடிப்பனுங்க'' — கனகலட்சுமியின் கணவன் கதிராசி விடுத்த வேண்டுகோளை அரசகேசரியால் தட்டிக்கழிக்க முடியவில்லை.

வேலை நடந்தது. கதிராசிக்குச் சங்கம் உபகொந்தராத்து முறையில் இவ்வேலையைக் கையளித்தது ஒருவருக்கும் தெரியாது. வேலைகள் முடிந்து அதற்கான கொடுப்பனவும் முடிந்துவிட்டது.

குழாய்க் கிண்ற்றிலிருந்து ஒரு துளி நீர் வாய்க்கால் வழி மூலம் செல்லவில்லை. மேசன்மார் தங்கள் எண்ணத்துக்குக் கட்டியிருந்தனர்.

கிணற்றிலிருந்து நூறுயார் வரை நீர் படிமானமாகப் பாய்ந்தது. ஆனுல் அதற்கப்பால், மேடான இடத்தில் சமநிலை பாராது வாய்க்காலை அமைத்துவிட்டனர். இதைப்பார்த்த திட்ட அங்கத்தவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர்.

''யாரை நோவது?'' கமலா கேட்டாள்.

''எங்கடை தலைவிதியைத் தான் நோகவேணும். '' வார்த்தையை முடிக்கு முன் பூமணி அழுதுவிட்டாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[8] கனவுகள் கனவுகளாகவே கலைந்து விடுகின்றன. திட்டத்தில் வாழ்வை மேற்கொண்டால் நல்ல எதிர்காலம் உண்டு என்ற நம்பிக்கையில் நிரந்தரமான திரை விழுந்து விட்டது என்ற எண்ணம் தான் சகலரது உள்ளங்களிலும் நிறைந்தது நின்றது. திட்டத்தில் உள்ள சிலர் விரக்தியால் தமது காணிகளை இரகசியமாக விலைக்கு விற்க ஆரம்பித்தனர்.

இப்பொழுதெல்லாம் பெண்களை அழைத்துக் கூட்டமெதுவும் கூட்டினால் கனகலட்சுமி வருவதில்லை. யாராவது கூட்டத்துக்கு ஏன் வரவில்லை என்று கேட்டால், ''பூமணி ஒரு கண்டறியாத தலைவி. அவவேலை மினக்கட்டு கூட்டம் போடுவா. எனக்கு வேறை வேலை இல்லையே'' என்று இறுமாப்புடன் மறுமொழி கூறுவாள் அவள். கனகலட்சுமியின் தூண்டுதலால் கதிராசி மூன்று காணித்துண்டுகளை இரகசியமாக விலைக்கு வாங்கி விட்டான். அவையாவும் கனகலட்சுமியின் காணிக்குப் பக்கத்தில் இருந்தன.

முழங்கேணியில் வேறு பெரிய கடைகள் இல்லாத படியால் கதிராசியின் கடையில் வியாபாரம் அமோகமாய் நடந்தது. கனகலட்சுமியைக் கடையில் இருத்திவிட்டு அவன் பூஞ்சோலைக்கு வந்து சகல பொருட்களையும் கொள்வனவு செய்து கொண்டு போவான். அலுப்பு இல்லாமல் முப்பது மைல் தூரம் சைக்கிளில் சென்று பட்டினத்தில் கொள்வனவு செய்தும் வருவான். அவனது கடையில் எந்தப் பொருளும் எப்பொழுதும் வாங்கலாம். கனகலட்சுமி இனிக்கப்பேசி எந்தப் பொருளையும் யாருடைய வலையிலாவது கட்டிவிடுவாள்

''நம்ம பாப்பா, வியாபார இரகசியத்தை நல்லாப் படிச்சிட்டா!''— கதிராசி பெருமையாய்க் கூறிக்கொள்ளுவான்.

திட்டத்தில் இருபது பெண்களுக்குக் காணி ஒதுக்கிவிடப்பட்டும் இதுவரை அனுமதிப்பத்திரம் வழங்க ஒரு ஏற்பாடும் நடக்கவில்லை. அங்கத்தவர்கள் யாவரும் அக்காணிகள் தம்முடையவை தானே என்ற எண்ணத்தில் அனுமதிப்பத்திரத்தைப் பற்றியே கவலைப்படாமல் இருந்தனர் காணி பரிமாற்றம் செய்வது சட்டவிரோதம் என்பதை அறிந்தவர்கள் மிக இரகசியமான முறையில் பணத்துக்குப் பரிமாறிக் கொண்டனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்று வருடங்கள் மின்னலென ஓடிமறைந்தன!

இதற்குள்தான் எத்தனை மாற்றங்கள்!

அரசகேசரியின் விடாமுயற்சியால் பூஞ்சோலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு இயங்குநர் சபைக்கான தேர்தல் நடந்தது. சகல குறிச்சிகளிலும் கிளைகள் மூலம் அரசகேசரியின் ஆட்களே தெரிவாகினர். தலைவர் தெரிவன்று எம்பியின் ஜீப் டீசலையும் செலவழித்துப் பூஞ்சோலையில் பரமலிங்கத்தின் தேவைக்காக ஓடியது தான் மிச்சம். காசையும் பாராது செலவு செய்து இரண்டு முக்கிய அங்கத்தவர்களைக் கடத்தி, தேர்தலில் குழப்பம் ஏற்படுத்தப் பரமலிங்கம் எடுத்த முயற்சி கூட தக்க தருணத்தில் முறியடிக்கப்பட்டது.

அரசகேசரிக்குத் தந்திரமான முறையில் சிந்தனை ஓடியது. தன் ஆதரவாளர்களை உஷார் படுத்தியிருந்தபடியால் பரமலிங் கத்தின் நிலை படுதிண்டாட்டமாய்ப் போய்விட்டது. இறுதியில் அரசகேசரி தலைவராகத் தெரிவு செய்யப்பட்டான்.

''இப்பதான் நிம்மதி'' — அரசகேசரி ஆறுதல் பெருமூச்சு விட்டான்.

மந்திரி ஐம்பத்துமூன்று பேருக்கு உத்தியோகம் எடுத்துக் கொடுத்தும், ஒரு குறிச்சிக்கு பஸ்சேவையை ஏற்படுத்தியும் கூட, பூஞ்சோலைத் தேர்தல் அவருக்குக் கைகொடுக்கவில்லை!

இத்தொகுதியில் அவர் கட்சி மண்ணையே கவ்வியது! அவரால் கூட வெற்றியை ஈட்ட முடியவில்லை — மந்திரியின் வெற்றியை மிகப்பெரிய அளவில் எதிர்பார்த்த அரசகேசரிக்கு இந்த அதிர்ச்சி தாங்கமுடியாததாகி விட்டது. ஆனால் எம். பி. மறுபடியும் தனது ஆசனத்தைக் காப்பாற்றிக் கொண்டார். ஆயினும் பழையபடி பூஞ்சோலையில் தமக்கு முன்னர் இருந்த ஆதரவைத் தேடவோ வேறு பணிகளில் ஈடுபடவோ முயற்சி செய்யவில்லை 'எத்தனையைச் செய்து கொடுத்திருப்பன்.. நன்றி கெட்ட சனங்கள்...!'' இப்படி ஒட்டுமொத்தமாகச் சொல்லி விட்டுப் பூஞ்சோலையிலிருந்து ஒதுங்கியே இருந்தார் எம். பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசகேசரி இப்பொழுது முழங்கேணித் திட்டத்துக்கு அடிக்கடி வருவதில்லை. பல ஆயிரக்கணக்கான பணத்தை விழுங்கிய அலுவலகம் உள்ளே தூசும் தும்புமாகக் கிடந்தது. எப்பொழுதாவது அங்கு சென்றால் கனகலட்சுமியின் கடையில் நின்று கதைத்துவிட்டு சென்று விடுவான். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் அவனுக்குத் தலைநிறைய வேலைகள் இருந்தபடியால் மற்றைய விஷயங்களில் கவனம் செலுத்துவதில்லை.

கனகலட்சுமி பணத்தைச் செலவளித்துத் தனது காணியில் ஒரு குழாய்க் கிணறு அமைப்பித்தாள். காணி செழித்துப் பொலிவாக விளங்கியது.

திட்டத்தில் முதல் அமைத்த குழாய்க்கிணற்றின் மோட்டார் பழுதுபட்டபின் திருத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்காத படியால் அது துருப்பிடித்தது.

அங்கு இணைக்கப்பட்டிருந்த எஸ்லோன் பைப் போன இடம் தெரியவில்லை!

காணிகள் வெளியாருக்கு இரகசியமான முறையில் விற்கப்பட்டன.

ஆரம்பத்தில் திட்டத்தில் மாதர் சங்கத்தில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு அமைய வீதி ஓரத்தில் இருந்த காணியைச் சங்க வேலைகளுக்காக பூமணி கேட்டிருந்தும் அது அத்தேவைக்குக் கொடுபடவில்லை. ஆனால் அதில் இப்பொழுது அரசகேசரி தனது தங்கையின் கணவனைக் கொண்டு திருத்த வேலைகள் செய்விக்கின்றான். கடை ஒன்று கட்டி விடப்போவதாகப் பேச்சு அடிபட்டது. திட்டம் முழுவதும் ஒரு அநாதைப் பிள்ளை மாதிரி ஒருவராலும் கவனிக்கப்படாமல் இருந்தது.

தேர்தலுக்குப் பின் மாற்று அரசாங்கம் பதவி ஏற்றதும் எத்தனையோ மாற்றங்கள்! வழமைபோல் முன்னைய அரசு ஆரம்பித்த சில திட்டங்கள் கைவிடப்பட்டன.

"பிரதேச அபிவிருத்தித் திட்டங்களை அவை வெற்றி அளிக்காத காரணங்களால் உடன் மூடி விடவும்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தாற்போல் இப்படியான ஒரு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

'ஒரு சனியன் ஒழிஞ்சுது! மனுசனுக்கு நல்ல நிம்மதி.'

அரசகேசரி மகிழ்ச்சி எய்தினுன்.

பூமணி மனதுக்குள் புழுகினுள். அவள் போன்றவர்களால் இதைத்தவிர வேறு என்ன செய்ய முடியும்.

"ஐயம்பிள்ளை பூமணி" லிகிதர் அழைத்ததும் பூமணியின் நீண்ட சிந்தனை கலைந்தது.

உள்ளே சென்ருள்.

இதில் இரும்"

— மாவட்டக்காணி அதிகாரி கூறினுர்.

அவளது விபரங்கள் யாவற்றையும் ஒரு நீண்ட பத்திரத்தில் ஒவ்வொரு குறிப்பாக எழுதினுர்.

"பேமிற் தருவீங்களோ சேர்...?" — பூமணி வெகு ஆவலுடன் கேட்டாள்

"பேமிற் தாறது பற்றி இப்ப ஒண்டும் சொல்ல முடியாது .. சில நேரம் பேமிற் தந்தாலும் தருவம் இப்ப நீ காணியிலை இருக்கிருய் தானே?" எழுதுவதை நிறுத்தி விட்டு பூமணியின் முகத்தைப் பார்த்தார் காணி அதிகாரி.

"ஐயா!" ஏதோ சொல்ல நினைத்தவள் அதை நிறுத்திக் கொண்டாள்.

"நான் காணியிலிருந்து தான் வாறன் ஐயா!"

"அப்படியென்ருல் சரி...! காணியை மட்டும் விட்டுப் போகாதை! இனி காணியை விற்கிற யோசனை இருந்தால் அதையும் இப்ப சொல்லிப் போட்டுப்போ...பின்னுக்குக் கரைச்சல் படாதை..." மாவட்டக் காணி அதிகாரி இதைச் சொல்லிவிட்டுப் பத்திரத்தில் ஏதோ எழுதினுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நான் கடைசிவரை காணியை விற்கமாட்டான் ஐயா...!''— இதைச் சொல்லும் போது அவளுக்கு அழுகைதான் வந்தது. ஆனாலும் அழுகையை அடக்கிக் கொண்டாள். மெதுவாக எழுந்து வெளியே வந்தாள்.

பூஞ்சோலைக் கடைத் தெருவை நோக்கி நடக்கின்றாள் பதினொருமணி மன்னார் குடி பஸ் வண்டியைப் பிடித்து அவள் முழங்கேணிக்குப் போக வேண்டும்.

அவள் மனம் கனத்திருந்தது!

[ முற்றும் ]

*[பெயர்கள், இடங்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே]*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந் நூலாசிரியரைப் பற்றி ...

நல்ல கலை இலக்கிய வாதியைவிட நல்ல மனிதப் பண்புகள் உள்ளவரைத் தேடுவதுதான் மிகுந்த சிரமமான விடயமாகும்.

நல்ல மனிதராக இருப்பதைவிட நல்ல கலை இலக்கியப் படைப்பாளியாக இருந்து என்ன பிரயோசனம். ஆகவே நல்ல மனிதராகவும் நல்ல கலை இலக்கியப் படைப்பாளியாகவும் இருக்கும் ஒருவரை நினைத்து நம்மால் பெருமைப்படத்தான் முடியும்.

அவ்வாறு பெருமைப்படக்கூடிய ஒருவர்தான் மதிப்புக்குரிய த. வைத்திலிங்கம் அவர்கள் ஆகும்.

மனிதநேயம் மிக்கவராகவும், எமது சமுதாயத்தில் உள்ள அநீதிகளை முனைப்புடன் எதிர்ப்பவராகவும் போலித்தனங்கள் [illegible]றந்த மனிதர்களின் சின்னத்தனங்களை சாடுபவராகவும் விளங்கு[illegible] பொறுப்பு மிகுந்த இந்த இலக்கியவாதியின் நூலுருப்பெற[illegible]ர் வது படைப்பு இது. "சிறைப் பறவைகள்", "ஒரு திட்டம் கூடப் படுகிறது" என்ற குறுநாவல்களையும், "மண்ணின் [illegible]", "பூம்பனிமலர்கள்" ஆகிய இரண்டு நாவல்களையும் எழுதி[illegible]ர் 125க்கு மேற்பட்ட சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

1965-ம் ஆண்டு "வைராக்கியம்" என்னும் சிறுகதை மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்த இவர் இதுவரை கலைச்செல்வி, வி[illegible], சிரித்திரன் போன்ற சஞ்சிகைகளிலும், சஞ்சீவி, ஈழநாடு, [illegible], தினகரன், சிந்தாமணி, ஈழமுரசு போன்ற பத்திரிகைகளிலும் தன் படைப்புக்களைப் படைத்துள்ளார். "ஒரு காகிதப் பூ கருக்கட்டுகிறது" என்னும் இவரது சிறுகதை "தகவம்" பரிசினையும் பாராட்டினையும் பெற்றுக்கொண்டது.

சங்கானை உதவி அரசாங்க அதிபராக இருந்து அப்ப[illegible] மக்களுக்கு எவ்விதம் பணிபுரிகின்[illegible]ரா, அவ்விதமே எந்தவித[illegible] சலசலப்பும் இல்லாமல் இலக்கியப் பணியும் புரிந்து வருகின்றார்.

இணுவையூர் சிதம்பர திருச்செந்திநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org